
★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 டிசம்பர் 22 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 302 | Thursday 22, December, 2022 | 12பக்கங்கள் | 50/-




## ஊடகவியலாளர்கள் சகல துறைகளிலும் அறிவுமிக்கவர்களாக இருத்தல் அவசியம்

**ஊடகவியலாளருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் பந்துல**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் அனைத்து ஊடகவியலாளர்களும் சகல துறைகளிலும் அறிவுமிக்கவர்களாக செயற்பட வேண்டியது அவசியமாகும். அது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு மிக

04

திருச்சி முகாமில் கைதான

## 09 பேரையும் ஜன. 03 வரை சிறையிலடைக்க உத்தரவு

**என்ஐஏ சிறப்பு நீதிமன்றம் உத்தரவு**



திருச்சி சிறப்பு முகாமில் கைது செய்யப்பட்ட இலங்கையை சேர்ந்த கிம்புலா எல குணா உள்ளிட்ட 09 பேரை, எதிர்வரும் ஜனவரி 03ஆம் திகதி வரை புழல் சிறையில் அடைக்க என்ஐஏ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களைத் தங்க வைப்பதற்காக திருச்சி மத்திய

04



பசுமை செயற்பாடுகளில் இலங்கைக்கு உதவிகள்;

## அயல் நாடுகளுக்கு பலம் சேர்க்கும் இந்திய பிரதமர்

**ஜி20 நாடுகளின் தலைவராகியமை சிறப்பானது இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே உரை**

பசுமை செயற்பாடுகளில் இலங்கைக்கு உதவிகளை இந்தியா வழங்கும் என இந்திய உயர் ஸ்தானிகர் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பின் பேரில், நேற்று

04

# நீதி நிலைநாட்டப்படுவதை துரிதப்படுத்தல் அவசியம்

**மேல் நீதிமன்றத்துக்கு இதில் முக்கிய பங்கு உள்ளது**



**கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் 25ஆவது ஆண்டு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு**

இருபத்தியோராம் நூற்றாண்டில் நீதி நிலைநாட்டுவதை விரைவுபடுத்துவதில் மேல் நீதிமன்றத்துக்கு முக்கிய பங்கு உண்டு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வழக்கு விசாரணைகள் தாமதமாகுதல், இதனால் அதிக செலவுகளை சுமக்க வேண்டிய நிலை காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுதல் ஆகியன விரைவில் முடிவுக்கு வர வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மேல் நீதிமன்றத்தின் வகிபாகம் மற்றும் நீதி நிலைநாட்டுவதை விரைவுபடுத்துதல் தொடர்பான அணுகுமுறை ஆகியவற்றைத் தீர்மானிக்கும் மையமாக மேல்நீதிமன்றமே காணப்படுவதாகவும் தெரிவித்தார். கொழும்பு மொனார்க் இம்பீரியலில்

04

பெரும்போகத்திற்காக

## விவசாயிகளுக்கு ரூ.20,000 விசேட கொடுப்பனவு



பெரும்போக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் ஆகக்கூடியது 20,000 ரூபா வரை பண உதவியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க இம்முறை வழங்கப்படவுள்ள இக்கொடுப்பனவு மீள அறவிடப்பட மாட்டாதென்பதுடன் முற்றிலும் நன்கொடையாகவே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய ஒரு ஹெக்டயர் அல்லது அதனிலும் குறைவான நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான நெல் விவசாயிகளுக்கு 10,000 ரூபாவும் ஒரு ஹெக்டயரிலும் அதிக நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நெல் விவசாயிகளுக்கு 20,000 ரூபாவும் வழங்கப்படவிருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரமே இப்பண உதவி வழங்கப்படவுள்ளதுடன் இவை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படும்.

இம்முறை 08 இலட்சம்

04

## 10 மணிநேர மின்வெட்டு என்பது பொய் வதந்தி

**அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் 8 மணித்தியாலம் அல்லது 10 மணித்தியாலத்திற்கு மின் துண்டிப்பை மேற்கொள்வதற்கு அவசியம் ஏற்படாதென்றும் அவ்வாறு இடம்பெற இடமளிக்கப்பட மாட்டாது என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர

04

## யாழ். மாநகர சபை பட்ஜெட் 07 வாக்குகளால் தோல்வி

**EPDP வெளிநடப்பு; எதிராக 18 வாக்குகள் பதிவு**

**யாழ்.விசேட, யாழ். குறூப், பருத்தித்துறை விசேட நிருபர்கள்**


யாழ். மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எழு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் 2023 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நேற்று புதன்கிழமை

04

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு 05 தினங்கள் மின்வெட்டு இல்லை

**மின்சார சபை நேற்று அறிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கிறிஸ்மஸ், புது வருடம் உட்பட இந்த பண்டிகைக் காலத்தில் மின் வெட்டை அமுல்படுத்துவதில்லையென மின் சக்தி எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 24, 25, 26 மற்றும் 31 ஆம் திகதிகளிலும் ஜனவரி முதலாம் திகதியும் மின்வெட்டு

04

பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காக காத்திருந்த

## 03 பெண்கள் மீது வான் மோதியதில் மூவரும் பலி



குருநாகல் – நாரம்மல வீதியில் பெதிகமுவ சந்திக்கருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

04

கனேடிய தமிழ் காங்கிரஸின் முயற்சியால்

## தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு 10 மில். பெறுமதியான மருந்துகள்





யாழ். தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு கனேடியத் தமிழர்களால் 10 மில்லியன் ரூபா பெறுமதியான உயிர்காக்கும் மருந்து வகைகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

கனேடிய தமிழ் காங்கிரஸின் ஆண்டுதோறும் தமிழ் கனேடியர்களின் நடைபவனி ஊடாக பல்வேறு தொண்டு

04

## உள்ளூராட்சி சபை தேர்தல் நாளை முக்கிய பேச்சுவார்த்தை

**தேர்தல் அதிகாரிகள் கொழும்பிற்கு அழைப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் விசேட பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக அனைத்து மாவட்டங்களிலுள்ள பிரதி மற்றும் உதவி

04



அரசியலமைப்பு பேரவை நியமனம்;

## ஒரு தமிழருக்கும் இடமில்லாது போனது குறித்து மனோ கவலை

**உதய கம்மன்பில, விமல் மீதும் பாய்ச்சல்**

அரசியலமைப்பு பேரவையில் நியமிக்கப்படவுள்ள ஏழு எம்.பிக்களுக்கான நியமனங்களில், ஐந்து சிங்கள எம்பிக்களும், ஒரு முஸ்லிம் எம்பியும் இப்போது பெயரிடப்பட்டுள்ளனர். இறுதி ஏழாவது

04

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் குறைப்பு

**நியாயமானது என்கிறார் அங்கஜன் எம்.பி**

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களைக் குறைக்க

04

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு;

## நான் மத்தியஸ்தராக செயற்படமாட்டேன்



**எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு**

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு

04

## புஸ்ஸல்லாவ பாடசாலை ஆய்வு கூடத்துக்குள் இரசாயனக் கசிவு

**மாணவர்கள் , ஆசிரியர்கள் ஆஸ்பத்திரியில்**

**ஹற்றன் சுழற்சி, தெல்தோட்டை தினகரன் நிருபர்கள்**

புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரியின் உயர்தர விஞ்ஞான மாணவர்கள் நேற்று (21) காலை பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை

04

## உணவுப்பொருட்களின் விலைகள் குறைந்தன

**சதொசவில் நேற்று முதல் அமுல்**



நத்தார் தின பண்டிகையை முன்னிட்டு, லங்கா சதொச நிறுவனம், 05 வகையான அத்தியாவசிய பொருட்களின் விலைகளை நேற்று (21)

04






ஊடகத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கான அசிதிஸி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன,ஊடகத்துறை அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவருமான அனுஷ பெல்பிட்ட ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அசிதிஸி புலமைப்பரிசில்களை வழங்கி வைத்தனர். (படங்கள்: கயான் புஸ்பிக்க)




# தேர்தலை இலக்கு வைத்த இனப்பிரச்சினை தீர்வுப் பேச்சுவார்த்தையாக இருக்கக்கூடாது

**இராதாகிருஷ்ணன் எம்.பி**

ஹற்றன் சுழற்சி நிருபர்

வடக்கு,கிழக்கில் நிலவும் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். இது தொடர்பான பேச்சுகளை தேர்தலை இலக்கு வைத்து முன்னெடுக்காமல், இதய சுத்தியுடன் முன்னெடுக்க வேண்டும்.

எல்லா சமூகத்தினரையும் அரவணைத்துக் கொண்டு இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பது தொடர்பான பேச்சுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதய சுத்தியுடன் முன்னெடுக்க வேண்டும். இதனை தேர்தல் பிரசாரத்துக்காக அவர் பயன்படுத்தக்கூடாது.

போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கான நடவடிக்கையின் ஓர் அங்கமாக பாடசாலைகளில் இன்று சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. பாடசாலை சிறார்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் மாணவர்கள் உள ரீதியில் பாதிக்கக்கூடும். எனவே, பொலிஸார் அடிக்கடி பாடசாலைகளுக்குள் நுழைவதை ஏற்கமுடியாது. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஒத்துழைப்புடன் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கப்படக்கூடாது.

எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தயார். ஆனால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவாரா என்பது ஐயமாகவே உள்ளது என்றார்.

# நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தில் தமிழில் விசேட பூஜை; தமிழ் மொழி குருக்கள் ராஜேந்திரன் இலங்கை வருகை

நுவரெலியா தினகரன் நிருபர்

நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தில் தமிழில் விசேட பூஜை எதிர்வரும் 25 ஆம் திகதி இந்திய குருக்களால் நடத்தப்படவுள்ளது.

மலையக மக்களின் 200 வருட நிறைவை முன்னிட்டு இந்தியாவின் தமிழ்நாடு கோயம்புத்தூர் நகரில் இருந்து வருகை தருகின்ற பிரபல தமிழ் மொழி குருக்கள் ராஜேந்திரன் நுவரெலியா சீதையம்மன் ஆலயம் உட்பட மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பூஜை வழிபாடுகளை நடாத்தவுள்ளார்.

நுவரெலியா ஆவேலியா முத்து மாரியம்மன் ஸ்ரீ சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணனின் அழைப்பின் பேரில் வருகை தரவுள்ள தமிழ் மொழி அர்ச்சகர் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருகின்றார்.இவருடன் கோயம்புத்தூர் ரோட்டறி கழகத்தின் முன்னாள் தலைவரும் ரோட்டறி வலய பணிப்பாளருமான (மாவட்டம்) தண்டபானி ஜெயகாந்தனும் வருகை தருகின்றார்.

மலையக மக்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்து எதிர்வரும் 2023 ஆண்டுடன் 200 வருடங்களை பூர்த்தியாவதை முன்னிட்டும் இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவில் இருந்து நாடு சுபிட்சம் பெறவும் மலையக மக்களுக்கும் இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கு ஆசி வேண்டியும் இந்த விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இலங்கைக்கு வருகை தருகின்ற தமிழ் குருக்கள் ராஜேந்திரன் தமிழ் மொழி மூலமாக பூஜைகளை முன்னெடுப்பதில் மிகவும் பிரபல்யமான ஒருவர்.

அவர் இதுவரையில் பல திருமணங்களையும் பல ஆலய கும்பாபிஷேகங்களையும் சினிமா நட்சத்திரங்கள் பலரின் திருமண நிகழ்வுகளையும் தமிழ் மொழியில் முன்னெடுத்துள்ளார். அத்துடன் இவரிடம் கற்றுக் கொண்ட பலர் இன்று மலேசியா சிங்கப்பூர், பிரான்ஸ்,அவுஸ்திரேலியா, கனடா உட்பட பல நாடுகளில் தமிழில் ஆலய பூஜைகள் உட்பட பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

24 ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள கங்காதீஸ்வரர் யாக பீடத்தில் பீடத்தின் ஸ்தாபகரும் பிரபல மனவள ஆலோசகருமான சாமி கங்காதரன் தலைமையில் விசேட பூஜை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.காலை 12 மணியளவில் இந்த பூஜை நடைபெறவுள்ளது.

25 ஆம் திகதி காலை 11.30 மணிக்கு சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் ஆலயத்தின் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.பக்தர்கள் கலந்து கொண்டு ஆசி பெற்றுக் கொள்ளலாம்.

## பசறை – பதுளை பிரதான வீதியில் விபத்து; இருவர் படுகாயம்

பதுளை தினகரன் விசேட நிருபர்

பசறை – பதுளை பிரதான வீதி பத்தாம் கட்டை பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

முச்சக்கர வண்டி – மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.விபத்து தொடர்பான விசாரணைகளை பசறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.



ஆறுமுகநாவலர் அறப்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியா சேவா சர்வதேச அமைப்பின் உதவியுடன் கண்டி மாவட்டத்திலுள்ள வறிய பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நிகழ்வு கண்டி இந்து கலாசார மண்டபத்தில் மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் தலைவர் துரை. சிவசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முருகாமலை தேவாஸ்தான அறங்காவலர் சபையின் தலைவர் எஸ். முத்தையா, அதன் செயலாளரும் சமூக சேவையாளர் பி. பழனியப்பன், இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் தலைவர் எம். ஸ்ரீகாந்தன் உள்ளிட்ட பிரமுகர்களுடன் பெரு எண்ணிக்கையிலான தாய்மார்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்)

# மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் இளம் தாயும் சிசுவும் மரணம்

பதுளை தினகரன் விசேட நிருபர்

மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தாயொருவர் சிசுவை பிரசவித்த பின்னர் உயிரிழந்த சம்பவம் நேற்று பதிவாகியுள்ளது.

எத்திமலை – கும்புக்கேயா பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதானவர் என்றும் இவர் தனது இரண்டாவது குழந்தையைப் பிரசவித்த போதே, உயிரிழந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பிரசவத்துக்காக சியம்பலாண்டுவ ஆரம்ப வைத்தியசாலையில் 08ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட பின்னர் மொனராகலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு சத்திரசிகிச்சை மூலம் குழந்தை பிரசவிக்கப்பட்டது.

குழந்தை பிரசவித்து சிறிது நேரத்திற்கு பின்னர் குழந்தை உயிரிழந்துள்ளதுடன் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட தாயும் பின்னர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.



ரொட்டரக்ட் பேன் கொழும்பு நிறுவனத்தின் நிதி அனுசரணையில் தலவாக்கலை கிரேட்வெஸ்டன் பாடசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட மலசலகூடம் நேற்று (21) மாணவர்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ், ரொட்டரக்ட் பேன் கொழும்பு நிறுவனத்தின் தலைவர் நலீஸ்,ரொட்டரக்ட் பேன் கொழும்பு நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் பெயித், ஆசிரிய ஆலோசகர் ரவீந்திரன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# மாகியாவ கிராமத்தில் இலவச கல்வி நடவடிக்கையால் பயனடைந்த மாணவர்கள்

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

கண்டி நகரின் அண்மையிலுள்ள மாகியாவ கிராமத்திலுள்ள மாணவர்களுக்கு கடந்த கொரோனா காலத்தில் தனிநபராக செயல்பட்ட சமூகசேவையாளர் வெ.சிவப்பிரகாஷம் செய்த இலவச வகுப்புகளால் பல மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

அந்த மாணவர்களுக்கு இலவசமாக வகுப்புகளை நடத்தியன் பயனாக க.பொ.த (சா/த) பரீட்சையில் இம்முறை 22 மாணவர்கள் சித்தியடைதுள்ளனர்.கொரோனா காலத்தில் பரீட்சைகள் பின்போடப்பட்டதுடன் பாடசாலைகளும் ஒழுங்காக இயங்கவில்லை. மேற்படி மாணவர்கள் கண்டி நகரத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளில கல்வி பயின்று வந்த போதிலும் கடந்த கால தொற்று காலத்தில் எந்த வித கல்வி நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் அவர் கிராமத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பல்வேறு பாடங்களுக்கு வகுப்புகுகளை நடத்தியதின் பயனாக அம் மாணவர்கள் உயர்கல்வியை தொடரும் வாய்ப்பை பெற்றுக் கொண்டுள்ளனர்.

# சிவனொளிபாதமலை யாத்திரிகர்களால் குவியும் குப்பைகள்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

சிவனொளிபாதமலை பருவ கால யாத்திரை ஆரம்பித்து 15 நாட்களில் மலை அடிவாரம் முதல் உச்சி வரை உள்ள பல பகுதிகளில் குப்பை கூளங்கள் வீசி எறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் சுற்றுச்சூழல் மாசடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான பீடாதிபதி பெங்கமுவ தம்மதின்ன தேரர் ஆரம்பத்தில் மலைக்கு வரும் யாத்திரிகர்கள் குப்பைகளை வீசி எறிய வேண்டாம் எனவும் பிளாஸ்டிக் மற்றும் வெற்று போத்தல்கள், பொலித்தீன் குப்பைகளை தவிர்க்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆனாலும் யாத்திரிகர்கள் குப்பைகளை போடுவதாக தெரிவிக்கப்படுகிறது.



லேக்ஹவுஸ் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் நத்தார் தின கரோல் நிகழ்வுகள் நேற்றைய தினம் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை கத்தோலிக்க பாடசாலைகள் பணிப்பாளர் கெமுனு டயஸ் கலந்துகொண்டதுடன் விசேட அதிதிகளாக ஊடகத்துறை அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவருமான அனுஷ பெல்பிட்ட, மற்றும் லேக்ஹவுஸ் நிறுவன பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் பிரபல சிங்கள பாடகர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு கரோல் பாடல்களைப் பாடி மகிழ்வித்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: சுதத் நிஷாந்த)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 22 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்



தொழுகை நேரம்
சுபஹ் - 04.56
லுஹர் - 12.11
அஸர் - 03.32
மஃரிப் - 06.02
இஷா - 07.17

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மார்கழி 07
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

ஓமானில் சுமார் 115 பெண்கள் தவிப்பு

# 25 பேரை நாட்டுக்கு மீள அழைத்துவர ஏற்பாடு

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தகவல்




ஓமானுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக சென்று பல்வேறு இன்னல்களுக்குள்ளாகி மீட்கப்பட்ட, 115 பணிப் பெண்களில் 25 பேரை நாட்டுக்கு மீள அழைத்துவர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கென வேலைவாய்ப்பு பணியகத்தினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட 115 பெண்களும், தற்போது தூதரக பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக ஓமானிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறிருப்பினும், இப் பாதுகாப்பு இல்லங்களில், ஆகக்குறைந்த வசதியேனும் இல்லாதமையால், இப்பெண்கள் அங்கிருந்து தப்பிச்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்நிய செலாவணியின் பிரதான பங்குதாரர்

# கைத்தொழில் துறையை வலுவூட்டுவதற்கு அரசாங்கம் தயார்

சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறையினர் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் சிறந்து விளங்கக்கூடிய சூழலை உருவாக்குவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் பிரதான பங்குதாரர்களான தொழில்துறையினரை வலுவூட்டுவதற்கு அரசாங்கம் தயார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் (20) பிற்பகல் நடைபெற்ற 'சாதனையாளர் விருது – 2022' இல் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனம் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து 21 ஆவது தடவையாக இவ்விருது வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.



வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைப் பார்த்து வருந்துவதை விடுத்து, சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இரண்டாம் உலகப் போரினால் அழிந்த ஜப்பானும் ஜெர்மனியும் கட்டியெழுப்பப்பட்ட 04

# ஜனவரி முதல் மின் கட்டண அதிகரிப்பு தவிர்க்க முடியாதது

## கட்டாயமாக திருத்தியமைக்க வேண்டும் - கஞ்சன



2023 ஜனவரி மாதம் முதல் மின்சார கட்டணத்தை கட்டாயமாக திருத்தியமைக்க வேண்டுமென மின்சக்தி – எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (21) நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

# காட்சியறையை உடைத்து உபகரணங்கள் திருட்டு

## CCTV கமரா மூலம் திருடியவர் கைது



காலி பிரதேசத்திலுள்ள தனியார் மின்சார உபகரண காட்சியறையொன்றை உடைத்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பொருட்களை திருடிய சந்தேகநபர் ஒருவரை காலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் காட்சியறையின் கண்ணாடிகளை கல்லால் தாக்கி உடைத்து உள்ளே நுழைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதான சந்தேக நபர் வெலிகம பிரதேசத்தை சேர்ந்தவராவார். இதற்கு முன்னதாகவும் ராஜகிரிய பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து பொருட்களை திருடிய குற்றத்துக்காக சிறைத்தண்டனை பெற்றவரென்றும் தெரிய வந்துள்ளது. இவர் (19) பிற்பகல் ரயிலில் காலிக்கு வந்து இந்தக் காட்சியறையை உடைத்து கையடக்கத் தொலைபேசிகள், கணனிகள் உள்ளிட்ட உபகரணங்களைத் திருடிச் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# நாட்டில் டெங்கு நோய் அதிதீவிரமாக பரவுகிறது

## மக்களுக்கு அதிகாரிகள் எச்சரிக்கை

2023 ஆம் ஆண்டு நாட்டில் டெங்கு நோயாளரின் எண்ணிக்கை அதிகம் பதிவாகும் அபாயம் இருப்பதாக சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தை விட அடுத்த வருட ஆரம்ப காலப்பகுதியில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்க கூடுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் திஸ்னக திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான கொள்கை ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமெனவும் சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் பொருளாதார வீழ்ச்சி 1995 ஆண்டிலேயே ஆரம்பம்

## கோட்டாபய பதவியேற்றதன் பின் அல்ல என்கிறார் அமைச்சர் பந்துல



கோட்டாபய பதவியேற்றதன் பின்னர் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டதாக சிலர் கூறுகின்றனர். உண்மையிலேயே 1995 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டதாக ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன நேற்று தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சின் 'அசிதிஸி' ஊடகவியலாளர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் சிறப்பதிதியாகக் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி உரையாற்றும் போது அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் 04

# நுவரெலியா மாவட்ட செயலரின் 12 ஆவது நடமாடும் சேவை



தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் 2022 ஆம் ஆண்டின் பன்னிரண்டாவது நடமாடும் சேவை அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்றது.

ஹிட்டிகே கிராமம், ஹகரபிட்டிய கிராமம் மினுவந்தெனிய, ஜம்புதென்ன, கொட்டேல்லென கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நடத்தப்பட்டது. நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் பணிப்புரையின் கீழ் அம்பகமுவ பிரதேச செயலாளர் திருமதி சிதாரா கமகே தலைமையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் வயோதிபர் அடையாள அட்டை வழங்கல், தேசிய அடையாள அட்டை வழங்கும் பொதுச்சேவை மற்றும் ஒரு நாள் சேவையின் செயற்பாடு, தயாரிப்பு பிறப்புச் சான்றிதழ் வழங்குதல், 04

# உள்ளூராட்சி தேர்தல் எந்த முறையில் நடந்தாலும் நாம் தயார்

லோரன்ஸ் செல்வநாயகம்



பழையமுறையின்கீழோ அல்லது நடைமுறையிலுள்ள முறைமையின் கீழோ எந்த முறையின் கீழ் உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன கட்சி தயாராகவே உள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்றுள்ள நிகழ்வொன்றின் போது அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தயாராகவேயுள்ளது. அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் தற்போது வேட்பாளர்களை தெரிவுசெய்வதற்காக விண்ணப்பங்கள் கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும் எந்த சந்தர்ப்பத்திலும் எந்த முறைமையின் கீழும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு கட்சி தயாராகவே உள்ளது என்றும் அதற்கான அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் புதிதாக 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி



இலங்கையில் புதிதாக 10 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று டிசம்பர் 21 ஆம் திகதி வரை உறுதிப்படுத்தப்பட்ட கொவிட் 19 தொற்றாளர் எண்ணிக்கை 6,71,821 ஆக பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் படியே நேற்று புதிதாக 10 பேர் பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திகதி 20.12.2022
செவ்வாய்க்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4975
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 9,826,260.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 13,459,647.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 0 9 3 2 8 8

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3217
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,680,100.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 02 39 66 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 64,321,878.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1005
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,479,820.00
Z 15 23 49 74
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 138,533,233.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1430
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,154,100.00
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 0 2 5 2 3 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,294,976.80

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 284
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 8,498,760.00
இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 08 26 29 60
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,546,828.60

கோடி 28+
Mega POWER
மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1323
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,603,340.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 287,724,410.00
S 07 40 48 57 59
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

தொழிலதிபர் தினேஷ் சாப்டர் படுகொலை

# பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் வாக்குமூலம் பெறத் தீர்மானம்

## பொலிஸார் விரிவான விசாரணை

லோரன்ஸ் செல்வநாயகம்



பிரபல தொழிலதிபர் தினேஷ் சாப்டரின் படுகொலை தொடர்பில் முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவருடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களது தொலைபேசிகளை தொடர்ந்து ஆய்வு செய்யும் நடவடிக்கைகளும் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறாமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தினேஷ் சாப்டர் நீண்ட காலமாக வசித்து வந்த கொழும்பு ப்ளவர் வீதி இல்லத்தில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கெமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகள் மற்றும் அவரது கையடக்க தொலைபேசி பதிவுகள் ஆகியவற்றை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே வேளை, மேற்படி படுகொலை இடம்பெற்ற தினத்தில் தினேஷ் சாப்டர் ப்ளவர் வீட்டில் உள்ள அவரது வீட்டில் இருந்து பொரளை பொது மயானத்திற்கு செல்லும் வழியில் உணவகம் ஒன்றில் சிற்றுண்டிகளை எடுத்துச் சென்றுள்ளாரென தெரிவிக்கப்படும் நிலையில், அந்த சிற்றுண்டி யாருக்காக கொண்டு செல்லப்பட்டது என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக விசாரணை மேற்கொள்ளும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவரது காரில் காணப்பட்ட வெற்றுப் பொதியொன்றை மேற்படி அதிகாரிகள் கண்டெடுத்துள்ளதுடன் அந்த சிற்றுண்டி வேறொரு நபருக்காக கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அவரது வீடு மற்றும் அலுவலகங்களில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடமும் விரிவான வாக்குமூலங்கள் பெறப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சில பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தினேஷ் சாப்டரிடம் பணி புரியும் சாரதிகள் ஆகியோரிடமிருந்து புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் முக்கிய தகவல்களை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவருடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தவர்கள் மற்றும் நெருக்கமான உறவுகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவருக்கு பல்வேறு கொடுக்கல் வாங்கல்களில் வழிகாட்டியாக செயல்பட்ட ஒருவர் தொடர்பிலும் தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா தூத்துக்குடியிலிருந்து

# இலங்கைக்கு கடத்தவிருந்த 1,500 Kg பீடி இலை பறிமுதல்



தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 1500 கிலோ பீடி இலைகள் தமிழகத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடலோர காவல்படையினரும், உள்ளூர் பொலிசாரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு மஞ்சள், கடல் அட்டை, கஞ்சா, அபின், செம்மரக்கட்டைகள், அம்பர்கிரீஸ் உள்ளிட்ட பொருட்கள் கடத்தப்பட்டு வருகிறது. இதைத்தடுக்க கடலோர காவல்படையினரும், உள்ளூர் பொலிசாரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் கியூ பிரிவு பழையகாயல் புல்லாவெளி கடற்கரையில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு நின்ற ஒரு லொறியை சோதனையிட்டபோது அதில் 1500 கிலோ பீடி இலைகள் இருப்பதும், அது இலங்கைக்கு கடத்தி செல்ல திட்டமிட்டிருப்பதும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து அதனை போலீசார் பறிமுதல் செய்தனர். இதனை இலங்கைக்கு கடத்த முயன்றவர்கள் யார்? என தீவிர விசாரணை நடத்தி 04

## யாழ். மாநகர சபை பட்ஜட்...

மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. வரவுசெலவு திட்டத்துக்கு ஆதரவாக 11 வாக்குகளும் எதிராக 18 வாக்குகளும் பதிவாகின. ஈழ மக்கள் ஜனநாயக கட்சி வெளிநடப்பு செய்ததுடன் வாக்கெடுப்பு நடைபெற்றபோது பங்கேற்கவில்லை. 45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ். மாநகர சபையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 16 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் 13 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் 10 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 03 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 02 உறுப்பினர்களும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றது.

## நாட்டின்... 03ஆம் பக்கத் தொடர்

பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்று ஒருவருட காலத்திலேயே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்ததாக பலரும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். எனினும் இந்த பொருளாதார விழ்ச்சி 95ஆம் ஆண்டுக் முன்பிருந்தே ஆரம்பித்து விட்டது. அரச வருமானத்தை விட செலவுகள் அதிகமாகி பாரிய கடன்களை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அரச வருமானம் 22 வீதத்திலிருந்து 13 வீதத்துக்கு குறைந்து நாட்டில் மக்கள் அதிகரித்து வரும் நிலையில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவது இயல்பே என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு கடத்தவிருந்த... 03ஆம் பக்கத் தொடர்

வருகின்றனர். இது தொடர்பாக பொலிசார் கூறும்போது, ஒருகிலோபீடி இலையின்இந்தியமதிப்பு ரூ.500 ஆகும். இலங்கையில் ஒரு கிலோ ரூ. 3 ஆயிரத்திற்கு விற்கப்படுகிறது. அதன் காரணமாக பீடி இலைகள் தொடர்ச்சியாக இலங்கைக்கு கடத்த முயற்சிக்கப்பட்டு வருகிறது. பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகளின் மதிப்பு ரூ. 07 லட்சத்து 50 ஆயிரம் ஆகும். இலங்கையில் இதன் மதிப்பு ரூ. 45 இலட்சம் ஆகும் என்றனர்.

## நுவரெலியா மாவட்ட... 03ஆம் பக்கத் தொடர்

திருமணங்களைப் பதிவு செய்தல், பாடசாலைக்கு செல்லாத குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புதல், வேலை வாய்ப்பு, வருங்கால மற்றும் தொழில் வழிகாட்டுதல் சேவைகள், ஊனமுற்ற குழந்தைகளுக்கான சேவைகளை வழங்குதல், ஆலோசனை வழங்குதல், பெண்களின் பிரச்சனைகளை தீர்ப்பது உள்ளிட்ட பல சேவைகள் மற்றும் குழந்தைகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு மேற்கொள்ளப்பட்டன.

## 03 பெண்கள் மீது வான்...

இந்த விபத்து நேற்று முன்தினம் (20) பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக குருணாகல் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாரம்மலை நோக்கிச் சென்ற வான், கட்டுப்பாட்டை இழந்து, வீதிக்கருகே இருந்த மதகொன்றில் மோதி, அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்த மூன்று பெண்களையும் மோதித்தள்ளி விபத்துக்குள்ளாகியது. விபத்தில் மூன்று பெண்கள் பலத்த காயமடைந்து நாரம்மல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் இருவர் உயிரிழந்துள்ளனர். மற்றொரு பெண் மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் பெதிகமுவ, நாரம்மல பிரதேசத்தை சேர்ந்த 56, 59 மற்றும் 61 வயதுடைய பெண்களே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

## விவசாயிகளுக்கு 20,000...

ஹெக்டயர் வயல் பரப்பில் பெரும் போகப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப் படவுள்ளது. அதற்கு அவசியமான MOP உரத்தை கொள்வனவு செய்வதற்காகவே விவசாயிகளுக்க இப்பண உதவி வழங்கப்படுகிறது.

இதற்காக 08 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதுடன், நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 12 இலட்சம் குடும்பங்களுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படுமென்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வெகு விரைவில் விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்தி இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தவுள்ளார்.

## 10 மணிநேர மின்வெட்டு...

தெரிவித்துள்ளார். நிலக்கரி கையிருப்பு முடிவடைவதால் அடுத்த ஜனவரி மாதத்தில் 10 மணித்தியால மின்துண்டிப்பை மேற்கொள்ள நேரிடும் என மின்சார சபை பொறியியலாளர்கள் தெரிவித்துவரும் நிலையில் அதற்கு இடமளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், நிலக்கரி பிரச்சினை காரணமாக நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் ஒரே நேரத்தில் செயலிழக்காது. அவ்வாறு நடைபெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது. எவ்வாறெனினும் 8 அல்லது 10 மணித்தியாலங்களுக்கு மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் எதிர்வரும் வருடத்தில் மூன்று தடவைகளில் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், திருத்த வேலைகளின் போது அந்த இயந்திரங்களை செயலிழக்கச் செய்வதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது. அதற்கிணங்க, ஒரு இயந்திரத்தில் மாத்திரம் திருத்தவேலைகளை மேற்கொள்வதுடன் அதனை மாத்திரம் செயலிழக்கச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு...

நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகிறது. இலங்கையின் மோசமான பொருளாதாரச் சரிவால் உயிர்காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளும் அதிகளவில் எதிர்கொண்டு வருகின்றன.

இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் 2022 செப்டம்பர்11ஆம் திகதி கனேடிய தமிழ் காங்கிரஸின் 14ஆவது வருடாந்த தமிழ் கனடிய நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டு அதில் திரட்டப்படும் நன்கொடை மூலம் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களிலுள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு உயிர்காக்கும் மருத்துவ பொருட்களை வழங்குவதெனத் திட்டமிடப்பட்டது.

இந்த நன்கொடையின் முதற்கட்டமாக கனேடிய தமிழ் காங்கிரஸினால் ஒழுங்கமைக்கப்பட்ட முதற் தொகுதி மருந்துப் பொருட்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (20) தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டது.

## கைத்தொழில் துறையை... 03ஆம் பக்கத் தொடர்

விருத்தை நாம் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள்,

நமது நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் கைத்தொழில்துறையினருக்கு பெரும் பொறுப்பு உள்ளது. நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் குழுவினராக தொழிலதிபர்கள் உள்ளனர். ஒரு நாடு என்ற வகையில் எம்மால் இந்நிலையிலிருந்து மீள முடியும் என்பதை நான் கூற விரும்புகின்றேன். இந்நேரத்தில், தொழில்துறையினருக்கு வரிச்சலுகைகளை வழங்க முடியாது. ஆனால் நமது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை மேலும் மேம்படுத்த முடியும். அதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம். உலகின் பிற நாடுகளில் உள்ள சிறிய, நடுத்தர கைத்தொழில்களின் வளர்ச்சியை அவதானித்து அவர்கள் பயன்படுத்திய நவீன தொழில்நுட்பத்தை நாமும் நமது சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தலாம். அரசாங்கம் என்ற வகையில் அதற்கு அவசியமான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்க நாம் தயாராக உள்ளோம். நீங்கள் பழைய முறைகளைப் பின்பற்றுகின்றீர்களா? அல்லது புதிய வழியில் சிந்தித்து, புதிய திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி, சர்வதேச ரீதியாக நாட்டை முன்னேற்றும் வழியில் செயற்படுகின்றீர்களா? என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். இதற்கான சிறந்த சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைத்துள்ளது.

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு...

அமுல்படுத்தப் பட மாட்டாது என்றும் மின்சார சபை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் இன்றைய தினமும் நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள இரண்டு மணித்தியாலங்கள் மற்றும் இரண்டு நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென்றும் அதற்கான அனுமதியை பொது பயன்பாட்டு ஆணைக்குழு வழங்கியுள்ளதாகவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

## அயல் நாடுகளுக்கு பலம்...

(21) சீதாவக்க தாவரவியல் பூங்காவுக்கு வருகை தந்த இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பூங்காவில் மரக்கன்றொன்றை நாட்டினார்.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பிரதமர்,

"இந்தியஇலங்கை நட்புறவு சில ஆண்டுகளுடன் மட்டுப்பட்ட ஒன்றல்ல. அது பல நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டது. எல்லாக் காலங்களிலும் இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகள் வலுப்பெற்று வந்திருக்கின்றன. இன்று இந்தியா உலகின் சக்திவாய்ந்த நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. இந்தியப் பிரதமராகவும் ஜி20 நாடுகளின் தற்போதைய தலைவராகவும் இருக்கும் நரேந்திர மோடியின் கீழ், அயல் நாடுகளுக்கு பல்வேறு நன்மைகள் கிடைத்துள்ளன.

உலகின் பலம் வாய்ந்த நாடொன்றின் உயர்ஸ்தானிகர் இந்த நிகழ்வில் பங்கேற்பது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துகிறது. எனவே, இன்று சீதாவக்க மக்களுக்கும் விசேடமான நாள். சுற்றாடல் என்பது ஒரு தலைமுறைக்கு மட்டுமானதல்ல. உயிர் பல்வகைத்தன்மை நிறைந்த இத்தகைய தாவரவியல் பூங்காக்களை பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும். நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் சீதாவக இராஜதானி முக்கிய பங்கு வகித்தது. அதற்கு இந்த தனித்துவமான சூழலின் இயற்கையும் காரணமாகும் என்றும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இந்திய உயர் ஸ்தானிகர்...

"இலங்கையின் பசுமை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு கிடைக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பொருளாதார ஒத்துழைப்புடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் இந்தியாவின் முழு ஆதரவும் இலங்கைக்கு வழங்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

இயற்கை வளங்களை சூழலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். இந்தியாவின் மகத்தான உறவுகளையும் வரலாற்றையும் நினைவுகூர்வதற்கும், அந்த சிறந்த உறவுகளை வலுப்படுத்திய பிரதமரின் தந்தை அமைச்சர் பிலிப் குணவர்த்தன போன்றவர்களை இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். எமது பொருளாதார கூட்டாண்மையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடும் சூழல் நட்பு கொள்கைகளை உருவாக்க இரு நாடுகளினதும் கூட்டு முயற்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, சீதாவக்க பிரதேச சபையின் தலைவர் ஜயந்த ரோஹன, கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன, சீதாவக தாவரவியல் பூங்கா பணிப்பாளர் கலாநிதி ஷிரோமி கிருஷ்ணராஜா உள்ளிட்ட அதிகாரிகள், பிரதேசவாசிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## உள்ளூராட்சித் சபை தேர்தல்...

தேர்தல் ஆணையாளர்கள், மாவட்டச் செயலாளர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது. மேற்படி பேச்சுவார்த்தை நாளை 23 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இந்தப் பேச்சுவார்த்தைக்காக அனைத்து மாவட்டங்களிலுமுள்ள மாவட்ட செயலாளர்கள் மற்றும் உதவி, பிரதி தேர்தல் ஆணையாளர்கள் உள்ளிட்ட தேர்தலுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி மன்ற...

எடுக்கப்படும் நடவடிக்கை நியாயமானதென யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். அண்மையில் சாவகச்சேரிப் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்ட போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; தற்போது உள்ளூராட்சி சபைகளில் நான்காயிரம் பேர் இருக்க வேண்டிய இடத்தில் எட்டாயிரம் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.இன்றைய காலகட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதே அரசாங்கத்துக்கு பாரிய சுமையாக காணப்படுகிறது.

கடந்த காலத்தில் நான்காயிரமாக இருந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் தொகையே தற்போது இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக மறுபடியும் உறுப்பினர்களைக் குறைக்க வேண்டிய தேவை உள்ளது என அவர் தெரிவித்திருந்தார்.

## ஒரு தமிழருக்கும் இடமில்லாது...

எம்பியாக ஒரு தமிழ் எம்பி இருக்க வேண்டும் என்பது மிக, மிக நியாயமான ஒரு எதிர்பார்ப்பு. ஆனால், இதையும்கூட தட்டிப் பறிக்க உதயகம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரின் "உத்தர சபை" கட்சி முயல்கிறது. அந்த நியமனம் உதய கம்மன்பில எம்பிக்கு வழங்க வேண்டுமென அந்த கட்சி பிடிவாதம் பிடிக்கிறது. இது உச்சக்கட்ட பெரும்பான்மைவாதம். திருத்த முடியாத திமிர்வாதம். இதை எதிர்த்து முறியடிப்பதில், தமிழ் தேசிய கூட்டமைப்புடன், தமிழ் முற்போக்கு கூட்டணி, இரட்டை குழல் துப்பாக்கியாக இணைந்து செயற்படுமென தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்தார்.

அரசியலமைப்பு பேரவை நியமனங்களில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பில் மனோ எம்பி மேலும் கூறியதாவது,

அரசியலமைப்பு பேரவையில் சட்டப்படி பத்து உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள். அதில் ஏழு எம்பிக்களும், மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் இடம் பெற வேண்டும். இந்த எம்பிகளில், நான்கு சிங்கள எம்பிகளும், தலா ஒரு எம்பியாக மூன்று எம்பீக்கள், வடகிழக்கு தமிழர், முஸ்லிம்கள், இலங்கை இந்திய தமிழர் ஆகியோரை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இதுவே நியாயமான நடவடிக்கை. ஆனால், இது நடைபெறவில்லை.

சபாநாயகர், பிரதமர், எதிர்கட்சி தலைவர் ஆகிய மூவரும் தம் பதவி நிலை காரணமாக அரசியலமைப்பு பேரவையில் இடம் பெறுகின்றார்கள். ஜனாதிபதியும், எதிர்கட்சி தலைவரும் தம் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். இதன்படி ரணில் விக்கிரமசிங்க, தமது பிரதிநிதியாக எம்பி நிமல் சிறிபால சில்வாவையும், சஜித் பிரேமதாச தமது பிரதிநிதியாக எம்பி கபீர் ஹாசீமையும் நியமித்துள்ளனர்.

அரசாங்கம், பிரதான எதிர்கட்சி ஆகிய கட்சிகளை சாராத சிறுகட்சிகளின் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பது சட்டம். அதன்படி, எம்பி சித்தார்த்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரேரித்துள்ளது. இப்போது இதுவே பிரச்சினையாக மாறியுள்ளது.

மொட்டு கூட்டணியில் தெரிவாகி விட்டு, அரசாங்கங்கத்தின் எல்லா தவறுகளுக்கும் காரணமாகி விட்டு, இப்போது எதிர்கட்சி பக்கத்தில் வந்து உட்கார்ந்துள்ள உதயகம்மன்பில, விமல் வீரவன்ச கும்பல், இதையும் தட்டி பறிக்க பார்க்கிறது.

உண்மையில், இந்த விவகாரத்தில் மலையக இந்திய வம்சாவளி தமிழரே முதலில், அந்திக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம், அவர்கள் நியமிக்கும் எம்பியாக இந்திய வம்சாவளி தமிழரை பிரதிநித்துவம் செய்யும் ஒரு எம்பியை நியமிக்கும்படி, நானும், எம்பி பழனி திகாம்பரமும் கோரிக்கை விடுத்தோம்.

தான் ஏற்கனவே, எம்பி நிமல் சிறிபால சில்வாவை பெயரிட்டு விட்டதாகவும், முதலிலேயே கூறி இருந்தால், பரிசீலிக்க இடமிருந்தது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் கூறினார். தமிழ் முற்போக்கு கூட்டணி எம்பி ஒருவரை தமது பிரதிநிதியாக நியமிக்க முதலில் எம்மிடம் உடன்பட, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, பிறகு தமது கட்சியில் இருந்து, எம்பி கபீர் ஹீசிமை நியமிக்க வேண்டிய கட்டாயம் தனக்கு உள்ளதாக கூறினார். எம்பி கபீர் ஹீசிம் சகோதர முஸ்லிம் எம்பி என்பதால் அதை நாம் புரிந்துக்கொண்டோம்.

இந்நிலையில், மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களில் ஒருவர், கட்டாயம் மலையக இந்திய வம்சாவளி தமிழராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும், அதற்கான பெயரையும் நாம், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக, பிரதமர், எதிர்கட்சி தலைவர்ஆகியோரிடம் சிபாரிசு செய்து வழங்கியுள்ளோம்.

இத்தகைய பின்னணியில், இறுதியான ஒரேயொரு எம்பி நியமனத்தில், எம்பி சித்தார்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு சிபாரிசு செய்துள்ளது. அது சட்டப்படியும், அரசியல் நியாயப்படியும் சரியானது. ஆகவே அதை நாமும் ஆதரிக்கிறோம். இதையே இன்று பிரச்சினைக்கு உள்ளாக்கி, அதையும் தட்டிப்பறித்து, ஈழத்தமிழ், மலையக தமிழ் என்ற பேதமில்லாமல் ஒரு தமிழ் எம்பிகூட அரசியலமைப்பு பேரவையில் இடம்பெற முடியாத நிலைமையை இனவாதிகள் ஏற்படுத்த முயல்கிறார்கள்.

## நான் மத்தியஸ்தராக...

அரசாங்கத்துக்கும் தமிழ்க் கட்சிகளுக்குமிடையில் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தராக செயற்படப்போவ தில்லையென நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.இந்த வாரம் எரிக்சொல்ஹெய்ம் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் எதிர்கட்சி தலைவருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தார். தற்போது நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை குறித்து கருத்து தெரிவித்துள்ள எரிக்சொல்ஹெய்ம், இப்பேச்சுவார்த்தை சூழல் சார்ந்த விடயங்கள் பற்றியே அமைந்திருந்ததாக குறிப்பிட்டுள்ளார். எரிக்சொல்ஹெய்ம் மீண்டும் மத்தியஸ்தராக செயற்பட வேண்டும் அரசியல் தீர்வை காண்பதற்கு உதவவேண்டுமென்ற வேண்டுகோள்கள் வெளியாகியுள்ளன.

எனினும் ஜனாதிபதியின் காலநிலை விவகாரங்களுக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள சொல்ஹெய்ம் காலநிலை மற்றும் சூழல் விவகாரங்கள் தவிர தனக்கு வேறு ஆணையில்லையென குறிப்பிட்டுள்ளார்.

## புஸ்ஸல்லாவ பாடசாலை...

ஒன்றின்போது Bromin புரோமின் இரசாயன குவளை உடைந்ததன் காரணமாக இரசாயன ஆய்வுக்கூடம் முழுவதும் வாயு பரவியது.

இதனால் அங்கிருந்த ஐந்து மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் பாதிப்புக்குள்ளாகி மூச்சுத் திணறல் காரணமாக புஸ்ஸல்லாவ வகுக்கப்பட்டிய வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நிலமையை கட்டுப்பாட்டு கொண்டு வரும் நோக்கில் கண்டி தீயணைக்கும் பிரிவினர் பாடசாலைக்கு விரைந்து இரசாயனத்தை அப்புறப்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஏனைய மாணவர்களை பாடசாலை நிர்வாகம் உடனடியாக அப்புறப்படுத்தியுள்ளதுடன் அவர்களை பாடசாலையில் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விரைந்து செயல்பட்ட பாடசாலை அதிபர் கம்பளை கல்வி வவலையத்திற்கும், மாகாண கல்வி பணிமனுக்கும் புஸ்ஸலாவ பொலிஸாருக்கும் அறிவித்ததன் பயனாக மேலதிக விசாரணைகளை புஸ்ஸலாவ பொலிஸார் கம்பளை பொலிஸ் அத்தியட்சகருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நீதி நிலைநாட்டப்படுவதை...

நடைபெற்ற கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டங்கள் எதிர்வரும் காலங்களில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் நாடு முன்னோக்கிச் செல்லும் போது புதிய சட்டங்கள் தொடர்ந்து உருவாக்கப்படுமென்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதில் மேல் நீதிமன்றத்திற்கு பாரிய பொறுப்பு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக பல வருடங்களாக தமது பணியை நிறைவேற்றிய சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நிகழ்வில் விருதுகளை வழங்கி கௌரவித்ததுடன், சட்ட மாஅதிபர் சஞ்ஜெய் ராஜரட்ணத்திற்கு நினைவுப் பரிசொன்றையும் கையளித்தார்.

சட்ட மாஅதிபர் சஞ்ஜெய் ராஜரட்ணம், சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர். டி சில்வா, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் குணவர்தன உள்ளிட்ட சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நீங்கள் எனக்கு வழங்கிய விருதுக்கு முதலில் நன்றி சொல்ல விரும்புகின்றேன். ஆனால் நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டும், நான் மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பணியாற்றியதில்லை. நான் சட்டத்தரணியாகப் பணியாற்றாத நீதிமன்றமே அது. நான் வழக்கறிஞர் தொழிலில் இணையும்போது, மேல் நீதிமன்றங்கள் நிறுவப்படாமல் இருந்ததுவே அதற்கான காரணமாகும்.

அந்த நேரத்தில் எங்களுக்கு அசிஸ் (Assize) நீதிமன்றம் இருந்தது. ஆங்கிலேயர் காலத்து நீதிமன்றம் என்று நினைக்கிறேன். சட்டக்கல்லூரி மாணவர்களான நாங்கள் கொழும்பு அஸீஸ் நீதிமன்றத்தில் வழக்குகளை கேட்பதற்காக அங்கு செல்வோம். அஸீஸ் நீதிமன்றத்தில் "கலத்தேவ வழக்கு" மற்றும் "குலரத்ன வழக்கு" போன்ற வழக்குகள் அப்போது நிலுவையில் இருந்தன. உங்களில் எத்தனை பேருக்கு "Pauline D'Cruz வழக்கு" நினைவிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் இவை இந்த நாட்டில் விசாரிக்கப்பட்ட மிகவும் பிரபலமான வழக்குகள்.

நான் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டபோதும் அஸீஸ் நீதிமன்றம் இருந்தது. எனினும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டதன் பின்னர், எனது சிரேஷ்ட சட்டத்தரணிகளுள் ஒருவரான எச். டபிள்யூ. ஜயவர்தன உட்பட பலர் மேல் நீதிமன்றத்தை நிறுவுவது குறித்து கொண்டு வந்த பிரேரணை எனக்கு நினைவிருக்கிறது. அப்போது, அஸீஸ் நீதிமன்றம் இருக்கின்ற போது, மேல் நீதிமன்றம் தேவையா என்று நாட்டில் பெரிய விவாதம் நடந்தது.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாண மேல் நீதிமன்றங்கள் நடைமுறைக்கு வந்தன. அதற்கு மேலதிகமாக வணிக மேல் நீதிமன்றங்களும் நிறுவப்பட்டன. நீதித்துறை விரிவாக்கப்பட்டது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. இப்போது கொழும்பு துறைமுக நகர் பகுதிக்குள் புதிய வணிக மேல் நீதிமன்றத்தை அமைப்பது குறித்து கொழும்பு துறைமுக நகர் ஆணைக்குழு ஆலோசித்து வருகிறது.

இதன் மூலம் அப்பகுதியின் நீதித்துறை விவகாரங்களைக் கையாளக் கூடியதாக இருக்கும். இது நமது சட்டக் கட்டமைப்பில் ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டுவரும். இது குறித்து ஏனைய துறைகளுடன் நாம் விரிவான கருத்தாடல் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

உதாரணமாக, பெண்களின் சமத்துவம் மற்றும் பெண்களை பலப்படுத்துதல் ஆகியவற்றுக்காக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கின்றோம்.இதற்காக பெண் சட்டத்தரணிகளை மாத்திரம் ஈடுபடுத்துவதா? அல்லது இரு தரப்பினரையும் பங்கேற்கச் செய்வதா? என்பதை கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகளே தீர்மானிக்க வேண்டும்.

மேலும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான புதிய சட்டங்களை தொடர்ச்சியாக அறிமுகப்படுத்த உள்ளோம். அங்கு மேல் நீதிமன்றத்துக்கு பெரும் பொறுப்பு உள்ளது. ஒரு நாடாக நாம் முன்னேறும்போது புதிய சட்டங்கள் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகின்றன. ஒரு சில நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டாலும், பல விடயங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

## உணவுப்பொருட்களின் விலைகள்...

முதல் குறைத்துள்ளது. ஒரு கிலோ பெரிய வெங்காயம் 05 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலையாக 185 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு பருப்பு ஒரு கிலோ 07 ரூபாவினால் குறைக்கப்பட்டு, புதிய விலையாக 378 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், 425 கிராம் உள்ளூர் ரின் மீன் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலையாக 480 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோ வற்றல் மிளகாய் 15 ரூபாவினாலும், நெத்தலி கருவாடு (தாய்லாந்து) 50 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன. வற்றல் மிளகாயின் புதிய விலை 1,780 ரூபாவாகவும், நெத்தலி கருவாடு (தாய்லாந்து) 1,110 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக சதொச நிறுவனம் தெரிவிக்கின்றது.

## 09 பேருக்கும் ஜன. 03 வரை...

சிறை வளாகத்தில் சிறப்பு முகாம் செயல்பட்டு வருகிறது. இங்கு இலங்கை தமிழர்கள் 80 பேர் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 132 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு புத்துயிரூட்டும் வகையில், பாகிஸ்தானிலிருந்து இந்தியா மற்றும் இலங்கைக்கு ஆயுதங்கள், போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக என்ஐஏ (தேசிய புலனாய்வு முகமை) அதிகாரிகள் கடந்த ஜூலை 08ஆம் திகதி தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்து, தமிழகத்தில் சென்னை, திருப்பூர் செங்கல்பட்டு உட்பட 22 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் ஜூலை 20ஆம் திகதி சோதனை நடத்தினர். திருச்சி சிறப்புமுகாமிலும் சோதனை நடத்தப்பட்டது.

அப்போது அங்கிருந்து செல்போன்கள், சிம் கார்டுகள், பென்டிரைவ், ஹார்ட் டிஸ்க், லேப்டாப், வைஃபை மோடம் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றை கேரளா கொண்டு சென்ற என்ஐஏ அதிகாரிகள், தொடர்ந்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், திருச்சி சிறப்பு முகாமிலிருந்த இலங்கையைச் சேர்ந்த கிம்புலா எலே குணா என்ற குணசேகரன் அல்லது பிரேம்குமார், புஷ்பராஜா என்ற பூக்குட்டி கண்ணா, முகமது ஆஸ்மின், அழக பெருமக சுனில் காமினி பொன்சேகா என்ற கொட்ட காமினி, ஸ்டான்லி கென்னடி பெர்னான்டோ என்ற பொம்மா, தனுக்க ரோஷன், லடியா, காமேஷ் சுரங்கா பிரதீப் என்ற வெள்ள சுரங்கா, திலீபன் ஆகிய 09 பேரை கைது செய்தனர். அவர்களை ஆயுதக் கடத்தல் வழக்கில் கைது செய்ததாக என்ஐஏ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஊடகவியலாளர்கள் சகல துறைகளிலும்...

அவசியமென ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சின் 'அசிதிஸி' ஊடகவியலாளர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் நேற்று ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பதிதியாகக் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி உரையாற்றும் போது அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், அறிவு வளர்ச்சியடைந்து வரும் உலகிலேயே நாம் வாழ்கின்றோம். அந்தவகையில் நாட்டின் ஊடகவியலாளர்கள் அனைத்து துறையிலும் அறிவுமிக்கவர்களாக செயற்படவேண்டியது அவசியமாகும். அது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமாகும்.

நாட்டின் சுதந்திர போராட்டத்தின் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளன. அந்த வகையில் 56ஆம் ஆண்டுக்குப்பின்னரும் ஊடகங்கள் நாட்டுக்கு வரலாற்று ரீதியான பங்களிப்பைச் செய்துள்ளன. பல்வேறு பேதங்களைக் கலைந்து அறிய பணிகளை மேற்கொள்வதற்காக லேக் ஹவுஸ் நிறுவனம், டி,ஆர். விஜயவர்தனவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. மார்டின் விக்கிரமசிங்க போன்றோர் பத்திரிகை ஆசிரியர்களாக அர்ப்பணிப்புள்ள சேவை செய்துள்ளதை குறிப்பிட முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

# அரச கொண்டாட்ட விழாவாக மீலாதுன் நபி நிகழ்வு




# இந்நாட்டு முஸ்லிம்களுக்கு பெரும் மகிழ்ச்சியே



**மீலாதுன் நபி நினைவு முத்திரை வெளியீட்டு விழா கொழும்பு, தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் (14.12.2022) நடைபெற்றது. இந்நிகழ்வில் நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) ஆற்றிய விசேட உரை...**

உலகளாவிய முஸ்லிம்களின் தனிப் பெரும் தலைவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு வருடா வருடம் எமது நாட்டில் தேசிய ரீதியாக அரச கொண்டாட்ட விழாவாக மீலாதுன் நபி நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுவதானது இலங்கை பிரஜைகளாகிய நம் அனைவரையும் பெருமிதம் அடையச் செய்கிறது. குறிப்பாக இந்நாட்டு முஸ்லிம்களாகிய எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

உண்மையில், முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களால் மட்டுமன்றி, ஒட்டுமொத்த மனித சமுதாயத்தினாலும் மதிக்கப்பட வேண்டிய ஒரு போதகராவார். அவர்கள் மிக்க அன்பும் கருணையும் கொண்டவராகவே காணப்பட்டார்கள். முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதார் என அனைவர் மீதும் அன்பும் கருணையும் கொண்டவராக இருந்தார்கள். அன்பு , கருணை பற்றிய அன்னாரது போதனைகள் இதற்கு சிறந்த சான்றாகும்.

"மண்ணில் இருப்பவர்களை நேசியுங்கள்; விண்ணில் இருப்பவன் உங்களை நேசிப்பான்.", "அன்பு செலுத்தாதவர்களுக்கு அன்பு கிடைக்காது." , "அன்பு செலுத்துபவரைத் தவிர வேறு யாரும் சுவனத்தில் நுழைய முடியாது." இவை மனிதர்கள் எல்லா பாகுபாடுகளுக்கும் அப்பால் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் சில நபி மொழிகளாகும். நபிகளார் இறைவனின் தூதராக தெரிவு செய்யப்பட முன்னரே மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஒரு மனிதநேயராகவே இருந்தார்கள்.

ஜாஹிலிய்யா என்று அழைக்கப்படும் இஸ்லாத்திற்கு முன்னைய காலத்தில் கூட 'ஹில்ஃபுல் ஃபுலூல்' என்ற மனித நேய அமைப்பில் இணைந்து மனித நேயப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். ஒடுக்கப்பட்ட மற்றும் அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதே அந்த அமைப்பின் முக்கிய பணியாக இருந்தது.

ஹிரா குகையில் முதன் முதலாக வானவர் ஜிப்ரீலைப் பார்த்து பயந்த நபியவர்கள் தனது வீட்டுக்கு ஓடிச் சென்று, தனது மனைவி கதீஜாவிடம் ஹிரா குகையில் நடந்ததை கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அன்னை கதீஜா அவர்கள் நபியவர்களுக்கு ஆறுதலளிப்பதற்காகக் கூறியவார்த்தைகள் இங்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

"கவலைப்படாதீர்கள், இறைவன் உங்களைக் கைவிட மாட்டார். ஏனென்றால் நீங்கள் கருணையுள்ளவர்; உண்மை பேசுபவர்; பலவீனமானவர்களுக்கு உதவி செய்பவர்; விருந்தாளிகளை உபசரிப்பவர்; துன்பப்படுபவர்களுக்கு உதவுபவர்....." இவ்வாறு அன்னை கதீஜா (றழி) அவர்கள் நபியவர்களின் உயர்ந்த மனிதப் பண்புகளைக் குறிப்பிட்டு அவர்களை ஆற்றுப்படுத்தினார்கள். மற்றுமொரு சந்தர்ப்பத்தில் நபியவர்கள் கூறினார்கள் :

"உங்களில் ஒருவன் தான் விரும்புவதை தனது சகோதரருக்கும் விரும்பாதவரை உண்மையான முஸ்லிமாக ஆக முடியாது."

இங்கு "சகோதரன்" என்ற சொல் சக மனிதர்கள் அனைவரும் தமது சகோதர்கள் என்ற கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி , ஒரு உண்மையான இறை நம்பிக்கையாளன் அனைத்து வேறுபாடுகளையும் தாண்டி, அனைத்து மக்களையும் நேசிக்கிறான் என்பது தெளிவாகிறது.

நபிகள் நாயகத்தை நினைவு கூரும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் அன்பையும் கருணையையும் நமது அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டும். எப்போதும் அன்புடனும் கருணையுடனும் செயல்படல் வேண்டும்.

"மனித நேயத்தால் மட்டுமே உலகம் நிலைக்க முடியும்; மனித வாழ்வு வளம் பெற முடியும்" என்ற பெரும் உண்மையை நாம் புரிந்து கொண்டு , மனிதநேயத்திற்கு முன்னுரிமையளித்து மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். இவ்வாறு உலகம் முழுவதற்கும் அருளாக வந்த முஹம்மது நபியின் பிறந்த நாளை கொண்டாடும் தேசிய மீலாதுன் நபிவிழா இவ்வருடம் பேருவளை ஜாமிஆ நளீமியா உயர் கல்வி நிலைய வளாகத்தில் இடம்பெற்றது அனைவரும் அறிந்ததே.

இந்த நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற நினைவு முத்திரையானது எமது நிறுவனத்தின் மஸ்ஜிதை (பள்ளிவாசலை) பிரதிபலிக்கும் வகையிலும் முகப்பு அட்டை நிறுவனத்தின் ஸ்தாபகர் நளீம் ஹாஜியார் அவர்களின் புகைப்படத்தை பிரதிபலிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இதனை நாம் எங்கள் நிறுவனத்திற்கான அங்கீகாரமாகவும் , எமது நிறுவனத்தின் ஸ்தாபகர் நளீம் ஹாஜியார் அவர்களுக்குக் கிடைத்த கௌரவமாகவும் கருதுகிறோம். இதற்காக உழைத்த பௌத்த சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், பௌத்த சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. சோமரத்ன விதான பத்திரன, பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் மர்ஜான் பளீல் ஆகியோருக்கும் நமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்த நினைவு முத்திரையை வெளியிடுவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹீம் அன்சார் மற்றும் திணைக்களத்தின் ஏனைய பணியாளர்களுக்கும் தபால் மா அதிபர், தபால் திணைக்களம், அந்தத் திணைக்களத்தின் முத்திரை பணியகம் மற்றும் அங்கு பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் எங்களது நிறுவனத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


















தயாரிப்பு
**அஜ்வாத் பாஸி**



## நளீம் ஹாஜியாரைப் பற்றி...

ஷெய்க் அகார் மொஹமத்

நளீம் ஹாஜியார் அவர்கள் எமது தாய்நாட்டிற்கு சர்வதேச ரீதியில் புகழைப் பெற்றுத் தந்த மாணிக்கக்கல் வியாபாரி மாத்திரமன்றி நாட்டிற்காகவும் சமூகத்திற்காகவும் தன்னையே அர்ப்பணித்த உன்னத மனிதரும் ஆவார். தான் சம்பாதித்த செல்வத்தை சமூக மேம்பாட்டிற்காக தியாகம் செய்த மாபெரும் மனிதர் அவர்.

அனைவருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்த நளீம் ஹாஜியார், தனது வாழ்நாளில் பத்து ரூபாயை கூட நியாயமற்ற முறையில் சம்பாதித்ததில்லை என்று கூறுவார். தன்னை சந்திக்க வரும் இளம் தொழிலாளர்களுக்கு 'ஒரு ரூபாய் கூட நேர்மை இல்லாமல், தவறான வழியில் சம்பாதிக்காதீர்கள்' என்று அறிவுரை கூறுபவராக இருந்தார் அவர்.

நளீம் ஹாஜியார் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் மக்கா நகருக்கு சென்ற போது , புனித கஅபாவின் வாசலில் நின்று இறைவனிடம் பிரார்த்தித்த விடயம் அவரது மனநிலையை துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது.

"இறைவா! அளவற்ற செல்வத்தை எனக்குக் கொடு; அந்த செல்வத்தை சமூக நலனுக்காக நல்வழிகளில் செலவு செய்யும் மனதையும் கொடு...!

நான் ஒரு பிரபல சிங்கள இரத்தினக் கல் வியாபாரியை சந்தித்தபோது அவர் என்னிடம் இவ்வாறு கூறினார் : "நளீம் ஹாஜியார் ஒரு மனிதப் புனிதர். இவரைப் போன்ற நல்ல முன்மாதிரியான தொழிலதிபரொருவர் இந்த நாட்டில் பிறக்கவில்லை. எதிர்காலத்தில் இவரை போல ஒருவர் பிறப்பாரா என்பதும் சந்தேகமே."

மற்றுமொரு பிரபல சிங்கள மாணிக்கக்கல் வியாபாரியுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது "எங்கள் தொழில் முன்னோடியாக இருந்த நளீம் ஹாஜியாரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்காமல் போனது எனது வாழ்க்கையில் பெரும் துரதிஷ்டம்" என்று குறிப்பிட்டார். நளீம் ஹாஜியார் இலங்கை முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்திக்காக முன்னெடுத்த செயற்திட்டங்களில் நளீமிய்யா உயர் கலாபீடம் , இக்ரா தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் போன்றன குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தை வகிக்கின்றன.

இலங்கை முஸ்லிம் சமூகத்திற்காக அவரால் ஆற்றப்பட்ட மிகச் சிறந்த சேவையாக நளீமிய்யா கலாபீடம் அமைந்துள்ளது.

நளீமிய்யா உயர் கல்வி நிறுவனத்தில் இஸ்லாமிய கற்கைகளுடன் வரலாறு , பிரதான மதங்கள் பற்றிய கற்கைகள் , சமாதான கற்கைகள் உட்பட சமூகவியல் மற்றும் மானிடவியல் பாடநெறிகள் கற்பிக்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் கல்வித் திட்டமானது தேசிய மற்றும் சர்வதேச அறிஞர்களது பெரும் பாராட்டை பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்தி , ஆய்வு மற்றும் பயிற்சிக்கான அகடமி (ADRT) , சமாதானம் மற்றும் உரையாடலுக்கான சலாம் நிலையம் (Salam Center for Peace and Dialogue) , நளீமிஆ நிகழ்நிலை கற்றல் மையம் (Naleemiah Virtual Learning Center) , தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான மாதிரி நிறுவனம் போன்றவை இந்த நிறுவனத்திற்குள் இயங்கும் உப அலகுகளாகும்.

கடந்த ஐந்து தசாப்தங்களாக, இந்த உயர்கல்வி நிறுவனம் இந்த நாட்டிற்கு கற்றறிந்த, நல்லொழுக்கமுள்ள மற்றும் முன்மாதிரியான ஒரு தலைமுறையை உருவாக்கிக் கொடுத்துள்ளதுடன் இந்த நாட்டிற்கும் சமூகத்திற்கும் அரும் பெரும் சேவைகளையும் ஆற்றியுள்ளது.

இறுதியாக எமது நிறுவனத்தின் ஸ்தாபகர் மறைந்த நளீம் ஹாஜியார் அவர்களுக்காகவும், முன்னாள் பணிப்பாளர் கலாநிதி சுக்ரி உட்பட நிறுவனத்தின் முன்னாள் தலைமைகளுக்காகவும் இங்கு கூடியிருக்கின்ற உங்கள் அனைவருக்காகவும் அல்லாஹ்வைப் பிரார்த்தித்து விடை பெறுகின்றேன்.





தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 07ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 27

### குறள் தரும் சிந்தனை



நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்

*பழைமையான நண்பர்களின் உரிமையைப் பாராட்டுகிற சான்றோர்க்குரிய கடமைதான் உண்மையான நட்புக்கு அடையாளமாகும்.*

## சீனாவில் மீண்டும் தலைதூக்கியுள்ள பெருந்தொற்றினால் உருவான அச்சம்!

நவீன அறிவியல் உலகில் மனித ஆரோக்கியத்திற்கு பெரும் சவாலான கொவிட் 19 தொற்று, 2019 ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவின் வூஹான் நகரில் தோற்றம் பெற்றது. இத்தொற்று தோற்றம் பெற்ற குறுகிய காலப்பகுதிக்குள் உலகம் முழுவதும் பரவியதோடு மில்லியன்கணக்கானோரின் உயிர்களைக் காவு கொண்டது. அத்துடன் கோடிக்கணக்கானோரை பாதிக்கவும் செய்திருக்கிறது. அதன் ஊடாக அத்தொற்று வரலாற்றில் அழியாத கறையையும் ஏற்படுத்தி விட்டது.

அதேநேரம் கொவிட்19 தொற்று தோற்றம் பெற்று பரவிய வேகமும், ஏற்படுத்திய பாதிப்புகளும் தாக்கங்களும் மக்களை கிலிகொள்ளச் செய்தன. அவர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். இவ்வாறானதொரு அச்சுறுத்தலையும் தாக்கத்தையும் இன்றைய நவீன உலகம் அண்மைக்கால வரலாற்றில் முன்னொரு போதுமே எதிர்கொண்டதாக இல்லை.

இத்தொற்றின் பரவுதல் தொடரைத் துண்டித்து விடுவதற்கு தேவையான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களும் வழிகாட்டல்களும் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்தோடு இதன் அச்சுறுத்தலை முறியடித்து மக்களை மீட்டெடுப்பதற்குத் தேவையான தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து புழக்கத்திற்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளும் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன. உலக சுகாதார ஸ்தாபனமும் மருத்துவ நிபுணர்களும் விஞ்ஞானிகளும் இது தொடர்பில் இரவுபகல் பாராது அயராது உழைத்தனர்.

அதன் பயனாக 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைப் பலவீனப்படுத்தும் தடுப்பூசி அவசர தேவையின் நிமித்தம் புழக்கத்திற்கு வந்தது. உலக வரலாற்றில் தொற்று நோயொன்றுக்கு எதிரான தடுப்பூசியொன்று குறுகிய காலப்பகுதிக்குள் குறிப்பாக ஒரு வருட காலப்பகுதிக்குள் கண்டுபிடிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டு, புழக்கத்திற்கு வந்தது இதுவே முதற்தடவையாகும்.

இத்தடுப்பூசியானது கொவிட் 19 தொற்றின் அச்சத்துக்கும் பீதிக்கும் உள்ளாகி இருந்த மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது. இத்தொற்றின் சவாலை முறியடித்து விட்டதாக மருத்துவ விஞ்ஞானிகள் நம்பிக்கையை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் ஒவ்வொரு நாடும் போட்டி போட்டது. அதனை தம் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த நாடுகளும் இத்தொற்றின் அச்சுறுத்தலில் இருந்து கட்டம் கட்டமாக நீங்கத் தொடங்கின.

கொவிட் 19 தொற்றின் பரவதலைக் கட்டுப்படுத்துவதற்கு அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்கள் உதவி புரிந்து வந்த நிலையில் இத்தொற்றின் தாக்கத்தைப் பலவீனமடையச் செய்யும் செயற்பாட்டை இத்தடுப்பூசி மேற்கொள்ளலானது.

இதன் பயனாக இத்தொற்றின் அச்சுறுத்தல் உலகில் கட்டம் கட்டமாக நீங்கலானது. அத்தோடு உலகமும் இயல்பு நிலைக்கு திரும்பத் தொடங்கியது.

இந்த நிலையில் 2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியாகும் போது இத்தொற்றின் அச்சுறுத்தலும் தாக்கமும் பெரிதும் வீழ்ச்சியடைந்தது. அதன் பயனாக உலகமும் இயல்பு நிலைக்குத் திரும்பலானது. அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்கள் மற்றும் தடுப்பூசியின் பயனாக கடந்த 10 15 மாதங்களாக இத்தொற்றின் அச்சுறுத்தல் பெரிதும் வீழ்ச்சி அடைந்து காணப்படுகிறது.

தற்போது இத்தொற்று சீனாவில் மீண்டும் தலைதூக்கி தீவிர நிலையை அடைந்திருக்கிறது. கொவிட் 19 தொற்று கட்டுப்பாட்டுக்கான பூச்சிய கொள்கையை முன்னெடுத்தும் கூட, அந்நாட்டில் இத்தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ளது. அதே நேரம் இத்தொற்றின் தாக்கம் மற்றும் பாதிப்புகளில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதற்கான முயற்சிகளில் தற்போது உலகம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த சூழலில்தான் இத்தொற்று மீண்டும் சீனாவில் தலைதூக்கி இருக்கிறது. இது பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது. அதன் விளைவாக இந்தியாவிலும் இத்தொற்று முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதனால் இத்தொற்றின் பரவுதலைத் தவிர்த்துக் கொள்வதிலும் அதன் தாக்கத்தைப் பலவீனப்படுத்துவதிலும் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு ஏற்ப தமது செயற்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் அமைத்துக் கொள்ளத் தவறக்கூடாது. முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல், சனநெரிசலான இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்தல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். அவற்றின் ஊடாக இத்தொற்று கடந்த காலத்தில் ஏற்படுத்திய பாதிப்புகளும் தாக்கங்களும் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதுவே இன்றைய தேவையும் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# நிந்தவூரில் கடலரிப்பை தடுக்க பாறாங்கற்கள் இடும் பணிகள்



### பிரதேச சபையின் பிரதி தவிசாளர் சுலைமாலெப்பையின் முயற்சியினால் நடவடிக்கை

கொழும்பிலுள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் பாதுகாப்பு சேவைக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் எஸ்.கே. பெரேராவை நிந்தவூர் பிரதேச சபையின் பிரதி தவிசாளர் வை.எல். சுலைமாலெப்பை தலைமையிலான குழுவினர் சந்தித்து உரையாடினர்.

நிந்தவூர் கடலரிப்பைத் தடுப்பதற்குத் தேவையான பாறாங்கற்களை ஒலுவில் துறைமுகத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்காக ஒலுவில் துறைமுகத்தில் உள்ள உதவி பாதுகாப்பு அதிகாரிக்கு விசேட பணிப்புரையை வழங்குமாறு பிரதம பொறியியலாளர் ஏ.எல்.எம். நௌபரை மேஜர் ஜெனரல் எஸ்.கே. பெரேரா கேட்டுக் கொண்டார்.

பிரதி தவிசாளர் வை.எல். சுலைமாலெப்பை கொழும்பு துறை முக அதிகார சபையின் காரியாலயத்தில் மேஜர் ஜெனரல் பெரேராவை சந்தித்தார்.

நிந்தவூர் பிரதேச கடலரிப்பைத் தடுப்பதற்கான பாறாங்கற்கள் இடுவதற்கான கேள்விமனு கோரப்பட்டு முடிவுற்ற நிலைமையில் கடலோரம் கல் இடும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஒலுவில் துறைமுகத்தில் இருந்து பெரும் பாறாங்கற்களை ஏற்றும் பணியும் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் (அபிவிருத்தி) ஏ.எல்.எம். நௌபரின் அனுமதியுடன் கொழும்பிலுள்ள இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து அனுமதிக் கடிதம் நிந்தவூர் பிரதேச சபையின் உபதவிசாளர் வை.எல். சுலைமா லெப்பையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் கடலரிப்பைத் தடுக்க தற்போது நிரந்தரத் தீர்வு கிடைத்துள்ளது. இதன் அடிப்படையில் கடலுக்குள் பெரும் பாறாங்கல் போடும் நடவடிக்கையும் ஆரம்பமாகியுள்ளதால் இப்பிரதேச மீனவர்களின் பிரச்சினைக்கும் விடிவு ஏற்படவுள்ளது.

இது விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கும் பிரதி தவிசாளர் சுலைமாலெப்பை கொண்டு வந்திருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிந்தவூர் பிரதேச மீனவர்களின் நன்மை கருதி இப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட உள்ளதாக சுலைமாலெப்பை தெரிவித்தார்.



மீனவர்களின் வாடிகள், சொத்துகள் மற்றும் உடைமைகள் அனைத்தும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். கரையோர மீனவர்கள், ஆழ்கடல், மீனவர்கள் அனைவருக்கும் தேவையான வாடிகள், அவர்களின் சொத்துக்கள் பாதுகாக்கக் கூடிய இடவசதிகளை மீனவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று பிரதி தவிசாளர் சுலைமா லெப்பைபொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரான பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுள்ளார்.

எதிர்வரும் 2023 ஆம் ஆண்டில் மீனவர்களின் குறைகளை உடனடியாக இனம்கண்டு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள மீன்பிடித் திணைக்களம், கரையோர பாதுகாப்புத் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம், பிரதேச செயலகம், பிரதேச சபை போன்றவற்றின் உயர் அதிகாரிகளின் கவனத்துக்கும் அமைச்சர்கள், செயலாளர்களின் கவனத்துக்கும் பிரதி தவிசாளர் வை.எப். சுலைமாலெப்பை கொண்டு வந்துள்ளார்.

# கிண்ணையடி மகாவிஷ்ணு ஆலயத்தின் பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியீடு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, கிண்ணையடி கிராமத்திலுள்ள ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயத்தின் மீது பாடப்பட்ட 'கிண்ணையடி மகாவிஷ்ணுவழி வீதி காவடி பாடல்' இறுவட்டு(CD) வெளியீடு நேற்று நடைபெற்றது.

கிழக்கிலங்கையின் நீண்டகால வரலாற்றுச் சிறப்பு கொண்ட ஆலயங்களில் ஒன்றாக வாழைச்சேனை, கிண்ணையடி ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம் விளங்குகின்றது. ஸ்ரீ மகா விஷ்ணு பக்தரும், மேற்படி ஆலயம் மீது மிகுந்த பற்று கொண்டவருமான கிண்ணையடி கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் மயில்வாகனம் ஸ்ரீப்பிரஹாஷ் இப்பாடல்களை இயற்றியுள்ளார். கவிஞர் மயில்வாகனம் ஸ்ரீப்பிரஹாஷ் எழுதிய பாடல் வரிகளுக்கு இசை, ஒலியாக்கம் ஆகியவற்றை மண்டூர் DTS படைப்பாக்கம் வழங்கியுள்ளது.

இனிமையாக இசையமைத்துப் பாடப்பட்ட பக்திப் பாடல்களை இந்த இறுவட்டு கொண்டுள்ளது.

விஷ்ணு வழி வீதி காவடி பாடல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் அதிதிகளாக கிண்ணையடி மற்றும் அயல் கிராமங்களிலுள்ள ஆலயங்களின் தலைவர்கள், ஊர்ப்பிரமுகர்கள் கலந்து கொண்டு இறுவட்டை வெளியிட்டு வைத்தனர்.

கிண்ணையடி ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய பரிபாலன சபையின் செயலாளர் மு.கோகிலதாசன் தலைமையில் நடைபெற்ற இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து கிண்ணையடி ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க. ஜெயசீலன் குருக்கள் சம்பிரதாய பூர்வமாக இறுவட்டை வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் விஷ்ணு ஆலய பக்தர்கள் மற்றும் பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பழைமையும் பாரம்பரியமும் நிறைந்த கிராமமான கிண்ணையடியில் சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் இக்கிராமத்தின் மீது பற்றுக் கொண்ட ஊர்ப்பிரமுகர்கள் ஓரிருவரின் அயராத முயற்சியினாலும், பரோபகாரிகள் வழங்கிய காணியினாலும் இந்த ஆலயம் உதயமானது. இந்த ஆலயத்தை அமைப்பதில் அக்காலத்தில் விஷ்ணு பக்தரான அமரர் இராமக்குட்டி என்பவர் முன்னிலையில் நின்று பணியாற்றியதாக ஆலய வரலாறு கூறுகின்றது. அவருடன் ஊர்ப்பிரமுகர்கள் பலர் ஆதரவாக நின்று செயலாற்றியுள்ளனர்.

அதன் பின்னர் இந்த ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது.





தற்போதைய நிர்வாக சபையினரின் தன்னலமற்ற முயற்சியின் விளைவாக ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு இன்று சிறப்பாகக் காட்சியளிக்கின்றது. ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் சமீபத்திலேயே நடத்தி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மு.கோகிலதாசன்...**
*(ஆலய பரிபாலன சபை செயலாளர்)*

# ஈரானின் செல்வங்களை சூறையிடும் திட்டம்!

ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் உருவாக்கியுள்ள சூழ்நிலையை ஈரானிலும் உருவாக்க மேற்கத்தேய நாடுகள் முயல்கின்றன. நாட்டை அழித்து அதன் வளங்களை கொள்ளையடிக்கவே இவ்வாறு குழப்பத்தை உருவாக்குகின்றன என்பது தெளிவு.

இவ்வாறு கூறுவது வேறு யாருமல்ல, முன்னாள் அமெரிக்க இராணுவ சிறப்பு நடவடிக்கை அதிகாரி ஸ்கொட் பென்னட் (Scott Bennett) என்பவராவார்.

'ஆப்கானிஸ்தானிலும் பின்னர் ஈராக்கிலும் செய்தது போன்று, ஈரானிலும், இராணுவத் துறைகளிலும் குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்த மேற்கு நாடுகள் முழுமூச்சாக செயல்படுகின்றன. ஈரானின் தேசிய வளங்களைத் சூறையாட வேண்டுமாயின், அதற்கு வசதியாக நாட்டுக்குள் குழப்பங்களை உருவாக்கி, பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டும்' என்று ஸ்காட் பென்னட் தெஹ்ரான் டைம்ஸிடம் கூறியுள்ளார்.

மேற்குலகு தமது திட்டங்களை நிறைவேற்றும் நோக்கத்தோடு லெபனான், சிரியா மற்றும் ஈராக்கில் பதற்றங்களைப் பயன்படுத்தி, தாக்குதல்களை நடத்தி வருகின்றது. 'மனித உரிமைகளை பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, போராட்டங்கள் என்ற போர்வையில் ஈரானுக்கு எதிராக உள்நாட்டுப் பயங்கரவாதம் ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

ஈரானில் இஸ்லாமிய ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் வரை இவர்களது திட்டம் நிறைவேறாது என்று அறிந்து வைத்துள்ள இந்த சக்திகள் ஈரானிய ஆட்சியை மாற்றும் முயற்சியில் இதே முறைகளையும் அதே கூலிப்படையையும் பயன்படுத்துகின்றன.

பலதரப்பட்ட மக்கள் கலந்து வாழும் பிரதேசங்களை இலக்காக்கி, மோதல் மற்றும் வன்முறையைத் தூண்டுவதற்கு இவர்கள் பயங்கரவாதிகளை பயன்படுத்தி வருவதில் இருந்து இவர்களது திட்டம் துல்லியமாகத் தெரிகிறது. இதற்காக கையடக்கத் தொலைபேசிகள், சமூக ஊடகங்கள் என்பன பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கத்தேய கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகங்கள் இதற்கு ஒத்தாசையாக இருக்கின்றன. பொலிஸ் சித்திரவதையின் காரணமாக ஒரு பெண் இறந்ததாகக் கூறப்படும் பொய்யான குற்றச்சாட்டின் பேரில் எதிர்ப்பு இயக்கத்தின் தோற்றம் ஆரம்பமானது, உண்மை என்னவெனில் அவர் ஏற்கனவே பீடிக்கப்பட்டிருந்த கடுமையான நோயினால் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஒரு சாதாரண சிறிய பிரச்சினை பூதாகாரமாக்கப்பட்டு, ஈரானுக்கு எதிரான இராஜதந்திர, பிரசார, இராணுவ மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் வடிவத்தை எடுத்திருப்பதானது, ஸ்காட் பென்னட் வாதிடுவது போன்று, அரசாங்கத்தை சீர்குலைக்கவும் ஈரானில் குழப்பத்தை உருவாக்கவும் கருவியாக பயன்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது.

நெதன்யாகு ஆட்சியின் கீழ் இஸ்ரேல் எவ்வாறு சிரியாவிற்கு எதிரான ஆக்கிரமிப்பு வான்வழித் தாக்குதல்களை முடுக்கிவிட்டதோ அவ்வாறே ஈரானுக்கு எதிரான சூழ்ச்சிகளை செய்வதற்காக ஈராக் மற்றும் பாரசீக வளைகுடா வான்வெளியில் தொடர்ந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கை எடுத்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. சமீபத்திய ஆண்டுகளில், இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் மற்றும் அமெரிக்க மத்திய கட்டளை ஏற்கனவே ஈரானுக்கு எதிரான தாக்குதலுக்காக பல கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு ஜுலை மாதம், ஜெருசலேம் பிரகடனம் என்றும் அழைக்கப்படும் அமெரிக்கஇஸ்ரேலிய மூலோபாய கூட்டாண்மை குறித்த கூட்டுப் பிரகடனத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் இஸ்ரேலிய பிரதமர் Yair Lapid உம் கையெழுத்திட்டனர். ஈரான் அணுவாயுதத்தைப் பெற ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது, அதை உறுதிப்படுத்த அதன் தேசிய சக்தியின் அனைத்து கூறுகளையும் பயன்படுத்த அது தயாராக உள்ளது என்ற அமெரிக்க உறுதிப்பாட்டை அது வலியுறுத்துகிறது.

அடுத்த ஆண்டு ஈரான் மீதான தாக்குதல்கள் தொடர்பான இராணுவ நடவடிக்கைகளுக்காக IDF இன் NIS 58 பில்லியன் ($17 பில்லியன்) பாதுகாப்பு பட்ஜெட்டில் இருந்து NIS 3.5 பில்லியன் ($1 பில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கத்தேய பகைமை மற்றும் ஈரானுக்கு எதிரான சூழ்ச்சியின் முக்கிய காரணி இஸ்ரேல்தான் என்ற வாதத்தை மேற்கூறிய அனைத்தும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மேலும் இந்தக் கொந்தளிப்பு நிலையை பயன்படுத்தி லெபனான், சிரியா, ஈராக் ஆகிய நாடுகளில் தாக்குதல்களை நடத்துகின்றன.

இனவாத வண்ணப் புரட்சிகள் பொதுவாக மேற்குலகின் ஆக்கிரமிப்பு பிரசாரங்களின் இலக்காகும். ஊடக போர்கள் குழப்பம் மற்றும் பதற்றங்களை உருவாக்குவதற்கு கவனச்சிதறல்கள் ஏற்படுத்தி இந்த இனவாத வண்ண புரட்சிகளை தொடங்குவதற்காகவும் ஆகும். ஈராக்கில் உருவாக்கிய பல்வேறு கோத்திர மற்றும் மதப் பிரிவுகளுக்கு இடையே மோதலும் இவர்கள் மூட்டிய போர்களில் அடங்கும். இதற்காக லிபியா மற்றும் சிரியாவில் குழப்பங்களை ஏற்படுத்த வெளிநாட்டு கூலிப்படையினர் பணியமர்த்தப்பட்டு, நிதியுதவி மற்றும் பயிற்சியளிக்கப்பட்டனர். இந்நடவடிக்கைகளின் நோக்கம் பிராந்தியங்களில் உள்ள மக்களிடையே பதற்றம், குழப்பம், மோதல் மற்றும் பகைமை ஆகியவற்றை உருவாக்கி, இயற்கை செல்வங்களை கொள்ளையடிப்பதாகும். இவர்களது திட்டத்தை அறிந்துகொள்வதற்கு கடந்த 20 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தான், ஈராக், சோமாலியா, லிபியா, சிரியா, லெபனான், யேமன் ஆகிய நாடுகளில் இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வரலாற்றைப் பார்த்தால் போதுமானது. எனவே இத்தகைய விரோத நடவடிக்கைகளை எதிர்கொள்ள ஒரு சர்வதேச கூட்டணி அவசியமாகும்.

**தமிழில்: தாஹா முஸம்மில்...**

# சீனாவில் பரவுகின்ற ஒமிக்ரோன் இந்தியாவுக்கு பாதிப்பைத் தராது!



சீனாவில் ஒமிக்ரோன் வேகமாகப் பரவி வந்தாலும், இந்தியாவில் கொரோனா பரவுவதற்கு இல்லையென்று இந்திய மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். சீனாவில் இப்போதுதான் ஒமிக்ரோன் பரவல் ஏற்பட்டு உள்ளது. ஒமிக்ரோன் பிரிவின் திரிபுகளான BA.2.75, BA.5, BQ.1, XBB ஆகியவைதான் சீனாவில் பரவுகின்றன.

இவையெல்லாம் ஏற்கனவே இந்தியாவில் இருந்தவைதான். இதெல்லாம் இந்தியாவில் ஏற்கனவே பரவியவை. இப்போதுதான் சீனாவில் இது பரவுகிறது. ஆனால் இது மீண்டும் இந்தியாவில் பரவ வாய்ப்பு இல்லை. இந்திய மக்களிடையே ஏற்கனவே இதற்கு எதிர்ப்பு சக்தி உள்ளது. இந்த அலை ஏற்கனவே முடிந்து விட்டது என்கின்றனர் மருத்துவர்கள்.

இந்தியாவில் தற்போது முகக்கவசம் அணிய வேண்டிய கட்டாயம் இல்லை. இந்தியாவில் பெரிய பாதிப்பு இதனால் இருக்காது. ஏற்கனவே இந்தியா இந்த அலையை கடந்து விட்டது. இந்தியாவில் டெல்டா பரவியதும் பலர் இறந்தனர். அது இந்தியாவில் தீவிரமாக இருந்த அலை. அதேபோல் அமெரிக்காவில் ஒமிக்ரோன் தீவிரமாக பரவியது. இப்படி எல்லா நாட்டிற்கும் ஒரு அலை இருந்தது. ஆனால் சீனாவிற்கு அப்படி எதுவும் இதுவரை இல்லை. இப்போது ஒமிக்ரோன் காரணமாக அங்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவுக்கு டெல்டா பரவலில் ஏற்பட்டது போல சீனாவுக்கு ஒமிக்ரோன். அதனால் இந்தியாவுக்கு பாதிப்பு இருக்காது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

# நகர்வலம்



# ஜம்இய்யதுல் உலமா சபையினர் சுற்றாடல் அமைச்சருடன் சந்திப்பு



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நூற்றாண்டு விழா, 2023ல் நடைபெறவுள்ள நிலையில், தாஸிம் மௌலவி, கலீல் மௌலவி உள்ளிட்டோர் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டை (20) சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, ஜம்இய்யதுல் உலமா எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அரசியல் ரீதியான தனது தீர்மானங்கள், முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்திய பிரதிபலிப்புக்கள் குறித்தும் அமைச்சர் இதன்போது எடுத்து விளக்கினார். 13 ஆவது திருத்தம் முஸ்லிம் சமூக அரசியலில் ஏற்படுத்தும் தாக்கங்களை எச்சரித்த அவர், இவ்விடயத்தில் முஸ்லிம் எம்.பி.க்களை ஒரே நிலைப்பாட்டுக்கு கொண்டு வருவதன் அவசியமும் ஜம்இய்யதுல் உலமா முக்கியஸ்தர்களுக்கு விளக்க ப்பட்டது.

அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தையும், ஜனாஸா எரிப்பையும் முடிச்சுப்போட்டு முன்வைக்கப்படும் விமர்சனங்களை நிராகரித்த அமைச் சர், ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்வதற்காக தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மற்றும் அரச உயர்மட்டங்களுடன் நடாத்தப்பட்ட பேச்சுக்கள் குறித்தும் விபரித்தார்.

எதிர்க்கட்சி மனோநிலையில் எந்த நேரமும் செயற்படுவதால், ஏற்படவுள்ள ஆபத்துக்கள் பெரும்பான்மை சமூகத்திடமிருந்து முஸ்லிம்களை தூரப்படுத்தும் ஆபத்திலிருந்து பாதுகாக்க அரசியல் சாராத அமைப்புக்கள் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

# கல்பொக்கை GPL அமைப்பினால் மருந்துப்பொருட்கள் கையளிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**



வெலிகம கல்பொக்கை நலன்புரிச் சங்கத்தினால் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடாத்தப்படுகின்ற இலவச மருத்துவ சேவையின் பாவனைக்காக சுமார் 40,000 ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் கல்பொக்கை ஜீ.பீ.எல். அமைப்பினால் நன்கொடையாக கையளிக்கப்பட்டன.

ஜீ.பீ.எல். நிறுவன ஆலோசகர் எம்.யூ.எம். வாஸிக், மற்றும் ஜீ.பீ.எல். நிறுவன பிரதித் தலைவர்களுள் ஒருவரான எம்.எம். முஹம்மத் ஆகியோர் மருந்துப் பொருட்களை கல்பொக்கை நலன்புரிச் சங்க சுகாதார பிரிவு செயலாளர் எம்.ஓ. பஸ்ழூர் ரஹ்மான் மற்றும் நாராஹேன்பிடி இராணுவ வைத்தியசாலை வைத்தியர் டாக்டர் எம்.என்.எம். முன்ஸிர் (MBBS) ஆகியோரிடம் ஒப்படைத்தனர்.

மேலும், கல்பொக்கையில் அமைந்துள்ள மருத்துவ நிலையத்துக்கும் மேற்படி நிறுவனத்தினால் 60,000 ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இந்நிகழ்வில் ஜீ.பீ.எல். அமைப்பின் பொருளாளர் எம்.ஐ. முஹம்மத் உறுப்பினர்களான எம்.எஸ். முஹம்மத் மற்றும் எம்.எம். மிப்ராஹ் ஆகியோர் கலந்து கொண்டனர். அதனை டாக்டர் பியசிறி அதனை கையேற்றார்.





புதிய ஆண்டுக்கான இறை ஆசி வேண்டும் பூஜை வழிப்பாடுகள் ராகமை மஹா தேவாலயத்தில் தேவாலய பிரதம கப்புரால தலைமையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: சுதத் மலவீர)



பேருவளை, மருதானை பாஸியதுந் நஸ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் (20) கல்லூரி வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதியாக கலந்துகொண்ட பேருவளை நகர சபை உப தலைவர் முனவ்வர் றபாய்தீன் மாணவியொருவருக்கு பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

**பண்டிகை காலத்தை முன்னிட்டு**

# பச்சை அப்பிள் 1Kg 2000ஆக குறைந்தது



சுமார் 2,400 ரூபாவுக்கு கடந்த சில நாட்களாக சுப்பர் மார்க்கட்டுகளில் விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ பச்சை ஆப்பிள், கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகை காலம் என்பதனால் 1990 ரூபாவாக சில சூப்பர் மார்க்கட்டுகள் குறைத்துள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ ஆரஞ்சு 990 ரூபாய், மற்றும் ஒரு கிலோ மாம்பழத்தின் விலை சுமார் 700 ரூபாய். மேலும், 100 கிராம் திராட்சை 250 முதல் 300 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் பழங்களின் விலை உயர்வால் பழ வியாபாரம் வெகுவாக குறைந்துள்ளதாக பழ வியாபாரிகள் கூறுகின்றனர்.

# தென் மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ரூ. 5000 மில்லியன் நிதி

## தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலீ கமகே

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



தென் மாகாணத்திலுள்ள 49 உள்ளூராட்சி சபைகளுக்கும் 5000 மில்லியன் ரூபா நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலீகமகே தெரிவித்தார்.

அம்பலாந்தோட்டை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடமாடும் வியாபார வாகனங்களை வியாபாரிகளுக்கு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தென் மாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்; நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் தண்டப்பணம் மற்றும் காணி உறுதிகள் எழுதுவதினூடாக கிடைக்கப்பெறும் முத்திரைக் கட்டணங்களினூடாக தென் மாகாண சபைக்கு கிடைக்கப் பெற்ற பணம் இவ்வாறு உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களாக மக்கள் பிரதிநிதிகளின்றி ஆளுநரின் கீழ் மாகாண சபைகள் இருந்து வருவதினால்தான் தென் மாகாண ஆளுநராக தான் நியமிக்கப்பட்டதிலிருந்து உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்தார்.

# கொழும்பு மாநகர சபை பட்ஜெட் நிறைவேற்றம்

## ஆதரவாக 94; எதிராக 06 வாக்குகள்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

கொழும்பு மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் 2023 எண்பத்தெட்டு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வரவுசெலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 94 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் கிடைத்தன. பத்தொன்பது பேர் கலந்து கொள்ளவில்லை.

மாநகர சபையின் வரவுசெலவுத் திட்ட விவாதம் மேயர் ரோஸி சேனாநாயக்க தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. கொழும்பு மாநகர சபைப் பிரிவில் வாழும் மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள கருப்பை மற்றும் மார்பக புற்று நோய் பரிசோதனை திட்டத்துக்காக 15 மில்லியன் ரூபா ஒதுக்கீடும் முதல் தடவையாக மேயரினால் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்ச்சியாக கோடீஷ்வரர்களை உருவாக்குகிறது





நாடு முழுதும் வெற்றியாளர்களை உருவாக்கும் அபிவிருத்தி லொத்தர் சபை நாட்டின்
அபிவிருத்திக்கு அதிகளவான பங்களிப்பினை வழங்குவதோடு உங்களையும் நாட்டினையும்
கருத்திற்கொண்டு இயங்குகிறது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் உதய சூரியனை போல் நம்பிக்கையுடைய சனிதா லொத்தரிடமிருந்து தொடர்ச்சியாக மூன்று கோடீஷ்வரர்களை உருவாக்க அபிவிருத்தி லொத்தர் சபைக்கு முடிந்தமையினை பெறுமையுடன் அறிவிக்கின்றோம்.

அவர்களுக்குரிய காசோலைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அபிவிருத்தி லொத்தர் சபை கேட்போர்க் கூடத்தில் அதன் தலைவர் மற்றும் நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நாரகல மற்றும் பொது முகாமையாளர் அநுர ஜயரத்ன தலைமையில் நடைபெற்றது.

உதயமாகவுள்ள புத்தாண்டினை வெற்றிகரமாக ஆரம்பிக்க அதிகதிகமாக அபிவிருத்தி லொத்தர் சபை சீட்டிழுப்புகளை கொள்வனவு செய்யுங்கள்.









வெலிகம அறபா தேசிய பாடசலையின் 94ஆம் ஆண்டின் க.பொ.த. (சா/த) மாணவர் குடும்பத்தின் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த 18ம் திகதி பேருவளை "செக்கு விலா" வில் நடைபெற்ற போது எடுத்துக்கொண்ட படம்.




# இரசாயன தொழிற்சாலைக்கான காணி எல்லையிடல்; பரந்தனில் மக்கள் போராட்டம்





பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்திற்குட்பட்ட குமரபுரம் பகுதியில் இரசாயன தொழிற்சாலைக்கான காணி எல்லையிடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த பகுதியில் உள்ள இரசாயன கூட்டுத்தாபனத்துக்குக்கான காணிகள் எல்லையிடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தே போராட்டம் நேற்று பகல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த காணிகள் தாங்கள் நீண்ட காலமாக குடியிருந்து வருவதாகவும் தமது காணிகளையும் சேர்த்து இரசாயனத் தொழிற்சாலைக்கான காணியெனத் தெரிவித்து எல்லையிட்டதுடன் நீண்ட காலமாக பயன்படுத்தி வந்த வீதியையும் மூடியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ். குடாநாட்டில் போலியான பீடை நாசினிகள் விற்பனை

## விவசாயிகளுக்கு எச்சரிக்கை

கோப்பாய் குறூப் நிருபர்



யாழ். குடாநாடு உட்பட வடமாகாணத்தில் இலங்கை அரசினால் தடை செய்யப்பட்ட விற்பனைக்கு அனுமதி வழங்கப்படாத போலி பீடைநாசினிகள், பங்கசு நாசினிகள் மற்றும் திரவப்பசளைகள் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என வடமாகாண பதில் விவசாய பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறிரங்கன் தெரிவித்தார்.

இலங்கை பீடைநாசினி 1980 ஆம் ஆண்டு 33ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட விவசாய இரசாயனங்கள் மற்றும் போலியான மற்றும் காலாவதியான மருந்துகளை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இச் சட்ட விரோத மற்றும் போலி விவசாய இரசாயனங்களை விவசாயிகள் பாவிப்பதனால் நெற்பயிர் செய்கை உட்பட ஏனைய பயிர்ச் செய்கையில் நட்டம் ஏற்படுவதுடன் சுற்றுச் சூழல் பாதிப்படைகிறது.

தற்போது நெற்பயிர்ச் செய்கை இடம்பெறும் நிலையில் விவசாயிகளுக்கு காலாவதியான மருந்துகளை சில வர்த்தகர்கள் பற்றுச் சீட்டு இன்றி விற்பனை செய்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

விவசாய இரசாயனங்களை விற்பனை செய்யும் கடைகளில் விற்பனை செய்யப்படும் இரசாயனங்களுக்கான விற்பனை சிட்டைகள் வழங்கப்படாததுடன் அனுமதிப்பத்திரங்கள் இல்லாத விற்பனையாளர்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றார்.



இலங்கை இராணுவத்தில் 511 ஆவது படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 30 வருடங்கள் நிறைவை முன்னிட்டு யாழ். கோப்பாயில் அமைந்துள்ள 511 ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடைபெற்ற போது,...
(படம்: கோப்பாய் குறூப் நிருபர்)

# யாழ்.காணாமல் போனோர் அலுவலகத்தில் நேற்று பதிவுகள்

யாழ். விசேட நிருபர்

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பதிவுகள் நேற்றைய தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் இந்த பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

காணாமல் போன ஆட்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நிறுவனத்தின் ஓ.எம்.பி. அலுவலக அதிகாரிகளினால் மாவட்டங்கள் தோறும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதனொரு கட்டமாக யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ளப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் குறித்த பதிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக எதிர்ப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டதோடு ஒரு சிலர் அதிகாரிகளிடம் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டு பாதீடு நிறைவேற்றம்

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாதீட்டு விசேட அமர்வானது நேற்றுக் காலை பிரதேச சபையின் தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது சபையில் ஆறு உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளிக்காத நிலையில் 17 உறுப்பினர்களுடன் இந்த பாதீடு சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது அனைத்து உறுப்பினர்களினுடைய ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2023 ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மெசிடோ நிறுவனம் மியன்மார் ரோஹிங்யா அகதிகளுக்கு உதவிக்கரம்

தலைமன்னார் விசேட நிருபர்



இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் பழுதடைந்த படகில் தத்தளித்த நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்ட ரோஹிங்கிய முஸ்லிம் அகதிகள் 105 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு நேரடியாக சென்று வழங்கி வைத்தது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு சென்று சுமார் 19 இலட்சம் ரூபா பெறுமதியான ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடைகள், சுகாதார பொருட்கள், உணவுகள் உள்ளடங்கலான பொருட்களை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் மேற்பார்வையில் வழங்கி வைத்தனர்.

யாழ். சிறைச்சாலையில் இருந்து மிரிஹானவில் உள்ள குடிவரவு தடுப்பு மையத்திற்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள நிலையில் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் இவ்வாறு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

பர்மாவில் இருந்து விரட்டப்பட்ட ரோஹிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேஷில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேசியாவுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் படகு மூலம் சட்டவிரோதமாக பயணித்தபோது நடுக்கடலில் படகு பழுதடைந்து 3 வாரங்களாக நடுக்கடலில் தத்தளித்த போது இலங்கை கடற்படையினரால் கடந்த சனிக்கிழமை காப்பாற்றப்பட்டனர்.

# வவுனியா மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடியால் 561 கர்ப்பிணித் தாய்மார் பாதிப்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக 561 கர்ப்பிணித் தாய்மார் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வவுனியா மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டோர் தொடர்பான விபரங்களை கோரிய போதே அவர் அதில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்படி, வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்ட பகுதிகளில் வசிக்கும் 348 கர்ப்பிணித் தாய்மாரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 213 கர்ப்பிணித் தாய்மாருமாக 561 பேர் பாதிப்படைந்துள்ளதாக அவர் அதில் தெரிவித்துள்ளார். அத்துடன், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் புத்தெழுச்சி மையங்களை உருவாக்கி பாதிக்கப்பட்ட மக்கள் கணிக்கப்பட்டு வருவதனால் பொருளாதார நெருக்கடியால் கர்ப்பிணித் தாய்மாருக்கு நிலையான பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.நூலகத்தில் மேலதிக நூல்கள் ஏனைய நூலகங்களுக்கு பகிர்ந்தளிப்பு

யாழ்.விசேட நிருபர்



யாழ்.மாநகர சபையின் பொது நூலகத்தில் மேலதிகமாக காணப்படும் புதிய புத்தகங்களை வடமாகாண ரீதியில் நூலகங்களுக்கு வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை யாழ்.மாநகர சபை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபை பொது நூலகத்தில் காணப்படும் மேலதிகமான புதிய புத்தகங்களை ஏனைய நூலகங்களின் பயன்பாட்டுக்கு வழங்குவது தொடர்பில் பிரேரணை ஒன்று யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனால், முன்மொழியப்பட்டு, உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இந் நிலையில் அச்செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக 17 பாடசாலை நூலகங்கள் மற்றும் 14 பிரதேச சபைக்குரிய 31 நூலகங்களுக்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் வழங்கப்பட்டது. எதிர்வரும் காலங்களிலும் புத்தகங்கள் தேவைப்படும் நூலகங்கள் அதற்கான கோரிக்கை கடிதங்களை வழங்கும் பட்சத்தில் அந் நூலகங்களுக்கும் புத்தகங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் உறுதியளித்தார்.



யாழ். மாவட்ட மாநகரசபை உறுப்பினரும் தேசோதய தலைவருமான தேசபந்து கலாநிதி நா.தனேந்திரனின் மனைவி லீலாவதியின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பத்தினருக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்ட போது,...

# வடராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம்

கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ்ப்பாணம் வடராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் உருக்குலைந்த நிலையில் இனந்தெரியாத சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த சடலம் நேற்று கரையொதுங்கியதாக கடற்றொழிலுக்கு சென்றவர்கள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து பருத்தித்துறை பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் அனுப்பியுள்ள நிலையில் பருத்தித்துறை பொலிசார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.நா. மகளிர் உரிமைக் குழுவில் இருந்து ஈரான் இடை நிறுத்தம்

## தன்னிச்சையாக மகளிர் போராட்டங்களை நசுக்குவதற்கு எதிர்ப்பு

ஐ.நாவின் மகளிர் உரிமைகளுக்கான ஆணைக்குழுவில் இருந்து ஈரான் வெளியேற்றப்பட்டுள்ளது. ஈரானில் பெண் உரிமைகளுக்கான போராட்டங்களை அந்நாடு காது கொடுக்காமல் நசுக்கி வருவதை கண்டிக்கும் வகையில் ஈரானின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவே ஈரானிய பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டிருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலை மறைப்பு அங்கி அணியாமல் பொதுவெளியில் காணப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட ஈரானிய இளம்பெண் மஹ்ஸா அமினி கடந்த செப்டம்பரில் உயிரிழந்ததையடுத்தே தம் மீதான கட்டுப்பாடுகளை நீக்கக் கோரி ஈரானிய பெண்கள் வீதிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மகளிர் கோரிக்கைகளை நிராகரிக்கும் ஈரானிய அரசு, இப் போராட்டங்களை ஒடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இப்பின்னணியிலேயே மேற்படி ஆணைக்குழுவில் 2022 – 26 காலப்பகுதிக்கான உறுப்புரிமையில் இருந்து ஈரான் நீக்கப்பட்டுள்ளது.

2908 என்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியா உள்ளடங்கலாக 16 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. நிக்கரகுவா, நைஜீரியா, ஓமான், பொலிவியா, சீனா, ரஷ்யா, கஸகஸ்தான் மற்றும் லிம்பாப்வே நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. வாக்கெடுப்பு கடந்த 14ம் திகதி நடைபெற்றது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரிட்டிஷ் பிரதிநிதி பார்பரா வூட்வார்ட், அம்னியின் மரணம் ஈரானில் காணப்படும் பெண்களுக்கு எதிரான அடக்குமுறையை வெளிப்படுத்துவதாகவும் பெண் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்றும் தமது அரசே தமது உரிமைகளை நசுக்குவதாக அம் மகளிரின் கோரிக்கை தெளிவானது என்றும் கூறியுள்ளார்.

ஈரான் மீதான சர்வதேச அவதானம் அதிகரித்து வருவதையும் இந்த அடக்கு முறைக்கு ஈரான் பொறுப்பு கூற வேண்டும் என்றும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவன் குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்த போராட்டக்காரர்களை விடுவிக்கும்படியும், எதிர்பார்ப்பாளர்களின் குரல்களை நசுக்கும் வகையில் தடுத்து வைப்பதைக் கைவிட வேண்டும் என செக் குடியரசின் ஐ.நா. பிரதிநிதி ஜாகுப், ஈரானிய அரசைக் கேட்டுள்ளார்.

# வவுணதீவில் இராணுவத்தினரால் விவசாய அறுவடை நிகழ்வு

கல்லடி குறூப் நிருபர்



வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை சிப்பிமடுக் கிராமத்தில் சேதன முறையில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கையின் அறுவடை, இராணுவத்தினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், மேற்படி கிராமத்தில் தரிசு நிலமாகக் காணப்பட்ட 16 ஏக்கரில் உன்னிச்சை இராணுவப் படைப் பிரிவினரால் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதில் கௌப்பி, பயறு, கச்சான் போன்ற தானியங்களுடன் மரவள்ளி, பயற்றை, புடலங்காய், பாகல், சுரக்காய் போன்ற மரக்கறிச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், அறுவடையில் கிடைத்த மரக்கறிகள் மற்றும் தானிய வகைகளை, வவுணதீவு பிரதேச செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் வீ.பேரின்பராசாவிடம் ஒருங்கிணைந்த பண்ணையின் பொறுப்பதிகாரி லெப்டினன் கேணல் ஜே.ஏ.பீ.குணரெட்ண வழங்கி வைத்தார்.

# கஞ்சாவுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

பாலமுனை தினகரன் நிருபர்

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்படி இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, இவ்விருவரையும் அண்மையில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

# நீர்க்குழியில் விழுந்து ஒருவர் மரணம்

வாழைச்சேனையின் கும்புறுமூலை பகுதியில் நீர் நிரம்பிய குழியொன்றில் தவறி விழுந்து ஒருவர் மரணமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டமொன்றில் வெட்டப்பட்டிருந்த குழியிலேயே நேற்று (21) இந்நபர் தவறி விழுந்துள்ளார்.

கும்புறுமூலையைச் சேர்ந்த 38 வயதுடைய உதிஸ்கரன் என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜெயந்தியாய கிராமத்தில் புதிய வாசிகசாலை திறப்பு

கல்குடா தினகரன் நிருபர்



வாகரை பிரதேச சபைக்குட்பட்ட மீள்குடியேற்றக் கிராமமான ஜெயந்தியாய கிராமத்தில் மிக முக்கிய தேவையாகக் காணப்பட்ட வாசிகசாலையொன்று நேற்று (21) திறந்து வைக்கப்பட்டது.

வாகரை பிரதேச சபை உறுப்பினர் எம்.எச். றஹீம் முஹம்மட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக வாகரை பிரதேச சபைத் தவிசாளர் கே.கணேசன் கலந்து கொண்டார். அத்துடன், இதில் ஊர் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர். வாசிகசாலை திறக்கப்பட்ட தினமான இந்நாள் ஜெயந்தியாய கிராமத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய தினமாகுமென, வாகரை பிரதேச சபை உறுப்பினர் எம்.எச்.றஹீம் முஹம்மட் தெரிவித்தார்.



ஊடகத்துறை அமைச்சின் 'அசிதிஸி' ஊடகவியலாளர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் நேற்று ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தினகரன் கந்தளாய் நிருபர் பாருக் முபாரக், முள்ளிப்பொத்தானை தினகரன் நிருபர் அப்துல் ஹலீம் ஆகியோருக்கும் அமைச்சர் பந்துல குணவர்த்தன புலமைப்பரிசில்களை வழங்கியபோது பிடிக்கப்பட்ட படம். (படங்கள்: கயான் புஷ்பிக்க)

# ஆறு சீன இராஜதந்திரிகளை சீனா திருப்பி அழைத்தது

## பொலிஸ் விசாரணைக்கு ஒப்படைக்க பிரிட்டன் வேண்டுகோள்

இங்கிலாந்து சீனத் தூதரகத்தில் பணியாற்றும் ஆறு இராஜதந்திரிகளை சீனா திருப்பி அழைத்துள்ளது.

தமது பணிக் காலத்தை நிறைவு செய்திருப்பதையடுத்தே இவர்கள் திருப்பி அழைக்கப்பட்டிருப்பதாக சீனத் தூதரக பேச்சாளர் காரணம் கூறியிருந்தாலும் பிரிட்டிஷ் பொலிஸ் நடவடிக்கைகளில் இருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காகவே அவசர அவசரமாக அவர்கள் திருப்பி அழைக்கப்பட்டிருப்பதாக இங்கிலாந்து தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மான்செஸ்டரில் அமைந்துள்ள சீனத்தூதரக காரியாலயத்துக்கு முன்பாக கடந்த அக்டோபர் 16ஆம் திகதி ஹொங்கொங் போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது சீனக் காரியாலயத்தைச் சேர்ந்த சிலர் ஒரு ஆர்ப்பாட்டக்காரரை உள்ளே இழுத்துச் சென்று நையப்புடைத்தனர்.

பின்னர் காயங்களுடன் அவர் ஆஸ்பத்தரியில் சேர்க்கப்பட்டார். இச்சம்பவத்தையடுத்து ஆறு சீன அதிகாரிகள் அவர்களது இராஜதந்திர கவசம் அகற்றப்பட்டு லண்டன் பொலிசாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட வேண்டும் என இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சு கோரியது.

இதையடுத்தே ஆறு சீன இராஜதந்திரிகளை சீனா திருப்பி அழைத்துக் கொண்டது.

இது தொடர்பாக விளக்கமளித்த சீனத் தூதரக பேச்சாளர், பணிக்காலம் முடிவடைந்த அதிகாரிகளை திருப்பி அழைப்பதும் புதியவர்களை நியமிப்பதும் வழமையானது என்றும், அறுவர் திருப்பி அழைக்கப்பட்டமை அவ்வாறான ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ளதோடு, ஆர்ப்பாட்டக்காரர்கள் சீனத் தூதுவராலய காரியாலய வளவுக்குள் புகுந்ததாகவும் பணியாளர்களுக்கு காயம் விளைவித்ததோடு காரியாலய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்ததாகவும் விளக்கமளித்துள்ளார்.

## கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு**

**ஒருகொடவத்த தாங்கி பண்ணை மற்றும் நீர் உள்ளீர்ப்பு நிலையத்தின் தோட்டப் பராமரிப்பிற்கான கேள்வி**
**கேள்விக் குறியீட்டு இல. – PD/SER/16/2022**

12 மாதங்களுக்கு ஒருகொடவத்த தாங்கி பண்ணை மற்றும் நீர் உள்ளீர்ப்பு நிலையத்தின் தோட்டத்தைப் பராமரிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களும் 2023-01-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2023-01-13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி : 0094-11-5455332**
**தொலைநகல் : 0094-11-5455424**


## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

WPCBA-5504TOYOTA C-HR SUV அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078553

**110 மாருதி கார்கள் விற்பனைக்கு**

WP CAS 3996 MARUTI SUZUKI ALTO CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078547

**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

CP LK - 3435 TOYOTA HI - LUX VIGO SMART அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078530

NC PC - 4532 TOYOTA HI-LUX VIGO D/CAB அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770 1 0 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078565

WP PR - 4782 MAHINDRA BOLERO PI K UP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078552

65-9973 KIA SPORTAGE SUV அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078528

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

CP DAE-4707 - MAHINDRA MAXXIMO PLUS TRU. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078524

NC JQ-5828 JCB 3CX BACKHOE LOADER அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078650

NPPQ - 4643 MAHINDRA BOLERO CAMPER. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078540

NP LH-9882 TATA LPK 1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078571

SP LJ-1782 TATA 1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078576

WPPX-2129 Mahindra Maxximo Truck அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078581

WPPX-8197 Mahindra Bolero Maxi truck அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078586

WP ND - 5436 TOYOTA COASTER BUS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078556

WP PQ-7002 Tata ACE HT2 Truck அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078561

WP PS-3184 TATA SUPER ACE TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078648

WP PT-9562 TATA 207 S/ CAB TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078573

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

NP BIY - 0887 TVS WEGO SBS MOTOR CYCLE. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078536

NW BIW-3521 HERO DESTINI BIKE அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078646

SP BIH-5078 TVS NTORQ BIKE அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078548

WP BIV - 8072 BAJAJ ZOO NSFI HBS BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 078543


## 1964 இலக்கம் 28இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல:** :- **KOLDS/LND/05/ACQ/55,**
:- **KOLDS/LND/05/1273**
**காணி அமைச்சின் குறிப்பு இல,** :- **4-3/5/2021/HW/114**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2022.12.06ஆம் திகதிய 2309/14, 2309/15 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் :- சப்ரகமுவ
மாவட்டம் :- இரத்தினபுரி
பிரதேச செயலாளர் பிரிவு :- கொலொன்ன

| ஆ.வ. இலக்கம்/ கடத்திரல் இலக்கம் | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| இ.கி.வ. 9.30 பிற்சேர்க்கை இல. 4, தாள் இல. 7 | 168 | 2,6326 | சூரியகந்த | இல. 202, புலுதொட்ட |
| இ.கி.வ. 930, பிற்சேர்க்கை இல. 5, தாள் இல. 8 | 163 | 2,5057 | சூரியகந்த | இல. 202, புலுதொட்ட |
| இ.கி.வ. 922, பிற்சேர்க்கை இல. 3, தாள் இல. 4 | 110 | 1,0285 | பொத்தன | இல. 203பீ, பொத்தன |
| இ.கி.வ. 930, பிற்சேர்க்கை இல. 6, தாள் இல. 9 | 53 | 0.5406 | சூரியகந்த | இல. 202, புலுதொட்ட |

**அமில விஜேரத்ன**
**பிரதேச செயலாளர்**
**கொலொன்ன.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**கொலொன்ன.**
**2022.12.21**

# பொருட்கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 114

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருகின்றார். தெரிவுசெய்யப்படும் விநியோகத்தர்கள் கொள்வனவு கட்டளை கிடைக்கப்பெற்று 45 நாட்களுக்குள் விநியோகத்தினை மேற்கொள்ளல் வேண்டும்.

1. **Item -** : White Printing Paper 17"_ 70gsm ± 2.5% 200MT ± 10%

விலைமனு குறிப்பு இல : SCP06/WPP/17/70/NCB42/2022-37

விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் : 2023.01.12ஆந் திகதி பி.ப.2.00 மணி வரையாகும்.

திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம் : ரூபா 20,000.00

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத்திணைக்கள வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம் மேலதிக விபரங்களை கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்**
**கொள்முதல் குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல.118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**2022.12.22**

**தொலைபேசி:** 011-2694898
**இணையத்தயளம்:** www.documents.gov.lk fhyp

## அறிவித்தல்

கிறிஸ்மஸ் தினத்தையடுத்து எதிர்வரும் 2022 டிசம்பர் 26ஆம் திகதியை விசேட வர்த்தக விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து மொர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் தலைமை அலுவலகமும் அதன் கிளைகளும் அன்று மூடப்பட்டிருக்கும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இதனால் உங்களுக்கு ஏற்படகூடிய அசௌகரியங்களுக்காக வருந்துகிறோம்.

நன்றி

நிர்வாகம்
**மொர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
Mercantile Investments and Finance PLC

## 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல - 3/6/2017/ජල.සම්/1-v111

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல 4-3/18/2019/WS/540

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2308/34 ஆம் இலக்க 2022.12.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியை பார்க்க

**அட்டவணை**

1. மாவட்டம் - குருநாகல்
2. பிரதேச செயலாளர் பிரிவு - பொல்கஹவளை
3. கிராமம் - அமுனுகம
4. காணியின் பெயர் - மெல்வத்த
5. வரைபட இல - அ.க.பி.1492 பிற்சேர்க்கை 13
6. துண்டு இல - துண்டு இல.290
7. விஸ்தீரணம் - 0.2150 ஹெக்டயார்

**பொல்கஹவளை**
**பிரதேச செயலாளர் பிரிவு**

**பிரதேச செயலகம்**
**பொல்கஹவளை**
**2022.12.14**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல்/வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்

**வழக்கு இலக்கம்** : CH/39/22/CO
**தன்மை** : கலைப்பு செய்தல் (ஒடுக்குதல்)
**நடைமுறை** : சுருக்கம்
**பெறுமதி** : ரூ. 117,652,239.26

தி வன் ட்ரான்ஸ்வர்க்ஸ் ஸ்கொயார் (பிறைவட்) லிமிடட்
இல. 114, சேத்தம் வீதி,
கொழும்பு 01 இலங்கை

மற்றும்

2007ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் 534ஆம் பிரிவின் சட்டத்திட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 270ஆம் பிரிவின் (உ) மற்றும் (ஊ) பிரிவின் கீழ் கொழும்பு 01, சேத்தம் வீதி, இல. 114, தி வன் ட்ரான்ஸ்வர்க்ஸ் ஸ்கொயார் (பிறைவட்) லிமிடட் எனும் நிறுவனத்தை கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

நயோமி ரன்சிறி வகிஸ்வர,
இல. 71, பூர்வாராம வீதி,
கொழும்பு 05 இலங்கை

**மனுதாரர்.**

தி வன் ட்ரான்ஸ்வர்க்ஸ் ஸ்கொயார் (பிறைவட்) லிமிடட் எனும் நிறுவனத்தினை ஒடுக்கவதற்காக 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடாத்தப்படும் மேல்மாகாண மேல் நீதிமன்றத்திற்கு மனுதாரரின் சார்பில் மெஸ்ஸர்ஸ் டீ.எல் மற்றும் எப். த சேரம் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2023 பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பம் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஒப்பம்:**
**மெஸ்ஸர்ஸ் டீ.எல். மற்றும் எப் த சேரம்**
**மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி**
**இல. 47, எலெக்ஸான்ரா பிளேஸ், கொழும்பு 07**

**குறிப்பு:-** அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

# பெறுகை அறிவித்தல்

## மத்திய வளிச்சீராக்கி முறைமை, சடல அறை குளிராக்கி முறைமை, வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல்

## சுகாதார சேவைகள் திணைக்களம் - சப்ரகமுவ மாகாணம்

சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரித்தான பின்வரும் வைத்தியசாலைகள் மற்றும் அலுவலகங்களில் 2023-02-01ஆம் திகதி முதல் 2024-01-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்தில் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2023-01-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | சேவை | வைத்தியசாலை / அலுவலகம் | முறைமை / இயந்திரங்களின் எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | மத்திய வளிச்சீராக்கி முறைமைக்கான சேர்விஸ் மற்றும் பராமரிப்பு | i. ஆதார வைத்தியசாலை - பலாங்கொட | 02 | சகல நிறுவனங்களுக்கும் ரூபா 20,000.00 | சகல நிறுவனங் களுக்கும் ரூபா 5,000.00 |
| | | ii. ஆதார வைத்தியசாலை - கஹவத்த | 01 | | |
| | | iii. ஆதார வைத்தியசாலை - கரவனெல்ல | 03 | | |
| | | iv. ஆதார வைத்தியசாலை - மாவனெல்ல | 02 | | |
| 02. | சடல அறைக்கான குளிரூட்டியின் சேர்விஸ் மற்றும் பராமரிப்பு | i. ஆதார வைத்தியசாலை - பலாங்கொட | 01 | சகல நிறுவனங்களுக்கும் ரூபா 20,000.00 | சகல நிறுவனங் களுக்கும் ரூபா 5,000.00 |
| | | ii. ஆதார வைத்தியசாலை - மாவனெல்ல | 01 | | |
| | | iii. ஆதார வைத்தியசாலை - கொலொன்ன | 01 | | |
| | | iv. ஆதார வைத்தியசாலை - தெரணியகல | 01 | | |
| | | v. பிரதேச வைத்தியசாலை - ரம்புக்கணை | 01 | | |
| 03. | வளிச் சீராக்கி இயந்திரங்களின் சேர்விஸ் மற்றும் பராமரிப்பு | i. ஆதார வைத்தியசாலை - கஹவத்த | 48 | சகல நிறுவனங்களுக்கும் ரூபா 20,000.00 | சகல நிறுவனங் களுக்கும் ரூபா 5,000.00 |
| | | ii. ஆதார வைத்தியசாலை - பலாங்கொட | 35 | | |
| | | iii. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்- இரத்தினபுரி | 16 | | |

03. 2022-12-22ஆம் திகதி முதல் 2023-01-10ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் மற்றும் 2023-01-11ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் ந.ப. 12.00 மணி வரையிலான காலத்தினுள் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் வழங்கப்படும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2023-01-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும். விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயைபான கட்டணத்தை இந்த அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை இரு கடித உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்தல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''.......................................... / சேவை வழங்குவதற்கான விலைக்கோரல் - 2023/ 2024" எனக் குறிப்பிட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

05. 2023-01-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லாவிட்டால் 2023-01-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

06. 2023-01-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

07. விலைமனுக்களை இலவசமாக இந்த அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

08. மேலதிக விபரங்களுக்கு இந்த அலுவலகத்தின் பிரதான கணக்காளரைத் தொடர்புகொள்ளவும்.

09. தொலைபேசி: 045-2222277.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**இரத்தினபுரி.**
2022-12-22.

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6281(MP) | 08 Nos. Rotary Actuators Fitted to Ram Spreaders at JCT | 75,000.00 | 1,000.00 | 19-01-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/07/026 | Engineering Bricks | 15,000.00 | 1,000.00 | 28-12-2022 பி.ப. 1.30 மணி |
| CES/FP/22/PT/16/037 | 08 Nos. Chain Ton 20,30 Feet | 30,000.00 | 1,000.00 | 28-12-2022 பி.ப. 1.30 மணி |
| CES/LP/22/PT/12/053 | MS Plate LR "A" 6000MM X 1500MM X 6MM – 10Nos | 65,000.00 | 1,000.00 | 12-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/17/056 | 5000 Nos. Safety Shoes for Year 2023 | 430,000.00 | 3,500.00 | 12-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/19/PT/17/059 | Cloth Drill – 1100 Mtrs | 18,000.00 | 1,000.00 | 12-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/17/057 | 1500 Mtrs. Of Cloth Drill for Year 2023 | 24,000.00 | 1,000.00 | 13-01-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 டிசம்பர் 22ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்:** 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
**தொலைநகல் எண்:** 2381652, 2470443

SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
for 15 Words - Rs.1,000/-
For each additional word Rs. 25/-
The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
Easy way to make your payment :- BOC - Acc.No. LAKE HOUSE BRANCH 000000377
Green Light for Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

# கிழக்கின் குரல்



# தொடர்ச்சியான அடை மழையினால் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளம்

**ஒலுவில், கல்முனை விசேட, நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்கள்**





அம்பாறை மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக பெய்து வரும் அடை மழையைத் தொடர்ந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், தாழ் நிலப் பிரதேசங்களில் வெள்ள அபாயம் தோன்றியுள்ளதாகவும், எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

மாலை வேளையிலேயே பலத்த காற்றுடன் அடை மழை பெய்கின்றது.

பொத்துவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திருக்கோவில், லகுகல, பாணமை, அம்பாறை, அக்கரைப்பற்று, நிந்தவூர், கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மருதமுனை ஆகிய தாழ்நிலப் பிரதேசங்களிலேயே வெள்ள அபாயம் தோன்றியுள்ளதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

குளங்கள் நிரம்பியுள்ளதால் அவற்றை அண்டியுள்ள சாய்ந்தமருதின் பொலிவேரியன் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், வெள்ள நீரை அகற்றுவதற்காக அங்கு பெரிய வாய்க்கால்கள் தோண்டப்பட்டன.

இதேவேளை, கல்முனையையும் கொலனிப் பகுதிகளையும் இணைக்கும் கிட்டங்கிப்பால வீதி, கல்முனை அம்பாறை நெடுஞ்சாலையிலுள்ள மாவடிப்பள்ளி பாலத்துக்கு மேலாக வெள்ளநீர் பாய்ந்தோடுவதை அவதானிக்கக் கூடியதாகவிருந்ததாகவும், செய்திகள் தெரவித்தனர்.

மழையினால் அநேகமான உள் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன், உள்ளூர் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன. தாம்போதிகளிலும் வாய்க்கால்களிலும் நீர் பெருக்கெடுத்துள்ளன.

இவ்வெள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு, வெள்ளநீரை கடலுக்கு அனுப்புவதற்காக தேவையேற்படின் சாய்ந்தமருது பிரதான முகத்துவாரம் உட்பட கல்முனை மாநகர பிரதேசங்களிலுள்ள அனைத்து முகத்துவாரங்களையும் திறப்பதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்பாக இருப்பதினால் தமது மீன்பிடித் தொழிலுக்காக தாம் கடலுக்குச் செல்லவில்லையெனவும் இதனால் தமது அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மீனவர்கள் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயத்தை

# 30 வருடங்களின் பின்னர் மீளத்திறக்க ஏற்பாடு



**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த 30 வருடங்களாக மூடப்பட்டிருந்த மட்டக்களப்பு நகர சிங்கள மகா வித்தியாலயத்தை மீளத் திறப்பதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வித்தியாலயத்தை புனரமைப்பதற்குத் தேவையான நிதியானது, மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினூடாக ஒதுக்கீடு செய்து தற்போது புனரமைப்பு வேலைகள் துரிதமாக இடம்பெறுகின்றன.

இப்புனரமைப்பு வேலையை பார்வையிடுவதற்காக மாகாண ஆளுநர் இவ்வித்தியாலயத்துக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள குடும்பங்களின் பிள்ளைகள் மற்றும் சிங்கள மொழியில் கல்வி கற்க ஆர்வமுள்ள குடும்பங்களின் பிள்ளைகள் இவ்வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முதன்முதலாக ரிதிதென்னை கிராமத்தில் வாசிகசாலை

**கல்குடா தினகரன் நிருபர்**



வாகரை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட ரிதிதென்னை கிராமத்தில் முதல் தடவையாக பொது வாசிகசாலையொன்று, அப்பிரதேச சபையினால் நேற்று (21) திறந்து வைக்கப்பட்டது.

வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வாகரை பிரதேச சபைத் தவிசாளர் கண்ணப்பன் கணேஷன் கலந்து கொண்டு இவ்வாசிகசாலையைத் திறந்து வைத்தார்.

ரிதிதென்னை கிராமம் உருவாக்கப்பட்டு 32 வருடங்களாகும் நிலையில், இக்கிராமத்தின் முக்கிய தேவைகளில் ஒன்றாகக் காணப்பட்ட வாசிகசாலைக்கான தேவையை பிரதேச சபை அமர்வுகளில், வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் தொடர்ச்சியாக முன்வைத்த கோரிக்கையின் பயனாக இவ்வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்று தேசிய பாடசாலைக்கு அருகிலிருந்த பாரிய மரம் சாய்ந்தது

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**



தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து வீசிய பலத்த காற்றினால் அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் பிரதான நுழைவாயிலுக்கு அருகிலிருந்த பாரிய மரமொன்று வேருடன் சாய்ந்து வீழ்ந்ததுடன், சேதத்தையும் உண்டு பண்ணியுள்ளது.

சுமார் 15 வருடங்கள் பழமை வாய்ந்த இப்பாரிய மரம் நேற்று முன்தினம் (20) முறிந்து வீழ்ந்ததைத் தொடர்ந்து, பாடசாலைக்கான மின்விநியோகம் தடைப்பட்டதுடன், சுவர்ப் பகுதியும் சேதமடைந்துள்ளதாக, அப்பாடசாலை அதிபர் ஏ.பி.முஜீன் தெரிவித்தார்.

அத்துடன், பாடசாலை போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்பட்டதாகவும், அதிபர் தெரிவித்தார்.

வேருடன் சாய்ந்த மரத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் பாடசாலை ஆளணியினருடன் அக்கரைப்பற்று மாநகர சபை ஊழியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் ஈடுபட்டனர்.

# பெண் எழுத்தாளர் மாநாடு

SRI LANKA PEN CLUB எனும் 'ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பு' நடத்தும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கான இரண்டாவது தேசிய மாநாடு, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய அரபுமொழி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

SRI LANKA PEN CLUB இன் தலைவி மஷூறா சுஹூறுத்தீன் தலைமையில் எதிர்வரும் 24 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இம்மாநாடானது, 'ஆற்றலுள்ள சிறந்த குடும்பப் பெண்களே சமூகத்தின் வரம்' எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

இதன்போது, அவரின் 4 சஞ்சிகையின் ஆண்டு மலரும் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன், 'அதி சுவையாக சமைப்பவர்கள் ஆண்களா, பெண்களா?' எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டின் இறுதியில் விருதுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

# பாலர் கல்வியை பூர்த்தி செய்த சிறார்களுக்கு சான்றிதழ்கள்

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**



அக்கரைப்பற்று AIMS சர்வதேச பாடசாலையில் பாலர் கல்வியைப் பூர்த்தி செய்த 160 சிறுவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அப்பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக டோஹா கட்டார் ஹம்மாட் பின் கலிபா பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் கல்லூரியினுடைய ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் கலாநிதி எம்.எம்.தீன் முஹம்மத் கலந்து கொண்டார்.

தமது பிள்ளைகள் கணினியிலும் கூகுல்களிலும் காட்டும் திறமைகளை பற்றி பெருமையாகப் பேசிக்கொள்ளும் பெற்றோர், அப்பிள்ளைகளின் ஒழுக்கம், சீரான கல்வி, மார்க்கநெறி பற்றி கருத்து தெரிவிக்காமலிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமென, டோஹா கட்டார் ஹம்மாட் பின் கலிபா பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் கல்லூரியினுடைய ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் கலாநிதி எம்.எம்.தீன் முஹம்மத் தெரிவித்தார்.

# போதைப் பாவனையைக் கட்டுப்படுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

**ஒலுவில் விசேட, நிந்தவூர் குறூப் நிருபர்கள்**



"பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மதுபானம், புகையிலை, போதைப்பொருள் பாவனை தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதுடன், சமூகப் பிரச்சினைகளைக் கையாளச் செய்தல்" எனும் கூட்டு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, கலாசாரப் பீடத்துக்கும் மதுபானம் மற்றும் போதைவஸ்து தகவல் நிலையத்துக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஒலுவில் வளாகத்தில் வைத்து நேற்று முன்தினம் (20) இப்புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. தற்போது பாடசாலை மாணவர்களிடத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுவதால், அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய விசேட வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் ஏ.றமீஸ் தெரிவித்தார்.

# கல்முனையில் டிஜிட்டல் அறிவை மேம்படுத்துவதற்கான செயலமர்வு



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

பெண் தலைமைகளுக்கான டிஜிட்டல் அறிவை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் மூன்றாம் கட்ட செயலமர்வு, கல்முனை ஹிமாயா பீச் ரிசோட்டில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பினால் (கபே) தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் ஜனனி டிஜிட்டல் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது, மேடைப் பேச்சுகளையும் ஊடக அறிக்கையிடல்களையும் எவ்வாறு மேற்கொள்ளுதல், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக சமூக ஊடகங்களை பயன்படுத்தும் விதம், தகவல் அறியும் சட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

# காரைதீவு வைத்தியசாலைக்கு பாணி மருந்து அன்பளிப்பு

**காரைதீவு குறூப் நிருபர்**



காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் நிலவி வரும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், அவ்வைத்தியசாலைக்கு காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினர் ஒருதொகை மருந்துப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 200 போத்தல்களைக் கொண்ட சிறுவர்களுக்கான பனடோல் பாணி மருந்தை நேற்று முன்தினம் (20) மேற்படி ஆலய நிர்வாகத்தினர் வழங்கியுள்ளனர். வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் சிறுவர்களின் நலன் கருதி இப்பாணி மருந்தை, காரைதீவு வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் நடராஜா அருந்திரனிடம் ஆலய நிர்வாகத்தினர் வழங்கி வைத்தனர்.

# புகழ்பெற்ற ஓவியர் பத்மவாசன் மட்டக்களப்புக்கு விஜயம்

**காரைதீவு குறூப் நிருபர்**



இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த உலகப் புகழ்பெற்ற ஓவியர் மு.பத்மவாசன், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் (20) வருகை தந்துள்ளார்.

இந்நிலையில், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் பயிற்சிப் பட்டறையொன்றையும் அவர் நடத்தினார்.

'ஓவியத்தினூடாக இறைவனைக் காணலாம்','நாவலர் பெருமான் வாழ்வும் வாக்கும்' ஆகிய தலைப்புகளில் அவரது பயிற்சிப் பட்டறை அமைந்திருந்தது.

# ஜப்னா இறுதிப் போட்டிக்குத் தகுதி



கண்டி பெல்கன்ஸ் அணிக்கு எதிரான முதல் தகுதிகாண் போட்டியில் டக்வர்த் லுவிஸ் முறையில் 24 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணி லங்கா பிரீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இந்தப் போட்டியில் தோல்வியை சந்தித்த கண்டி அணிக்கு இறுதிப் போட்டிக்கு முன்னேற மற்றொரு வாய்ப்பு உள்ளது. அந்த அணி இரண்டாவது தகுதிகாண் போட்டியில் இன்று (22) களமிறங்கவுள்ளது.

கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய வனிந்து ஹசரங்க தலைமையிலான கண்டி அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களையே பெற்றது.

இதில் ஜப்னா அணியின் சுழல் வீரரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந்த் 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். இதன்மூலம் அவர் ஆட்ட நாயகன் விருதையும் வென்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய ஜப்னா கிங்கஸ் அணியின் இன்னிங்ஸில் இரு முறை மழை குறிக்கிட்டது. இதில் அந்த அணி 11 ஓவர்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து 98 ஓட்டங்களை பெற்றிருந்தபோது மழை குறிக்கிட்டதால் போட்டியை தொடர முடியாமல் போனது.

இதனால் டக்வர்த் லுவிஸ் முறையில் போட்டி முடிவு தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது ஜப்னா அணிக்காக அதிகபட்சமாக அவிஷ்க பெர்னாண்டோ 11 பந்துகளில் 21 ஓட்டங்களை பெற்றார்.

அதிக மக்கள் திரண்டதால்:

# ஆர்ஜன்டீனாவின் உலகக் கிண்ண கொண்டாட்டம் பாதியில் நிறுத்தம்



மிதமிஞ்சிய ரசிகர்கள் திரண்டதால் நாடு திரும்பிய உலக சம்பியன் ஆர்ஜன்டீன அணியினர் தனது திறந்த பஸ் பேரணியை பாதியிலேயே கைவிட்டதோடு அதற்கு பதில் மில்லியன் கணக்கான ரசிகர்கள் கூட்டத்தை ஹெலிகொப்டர் ஒன்றில் சுற்றிவந்து பார்வையிட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டாரில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பிரான்ஸை வீழ்த்திய ஆர்ஜன்டீன அணி செவ்வாய்க்கிழமை (20) நாடு திரும்பியது. அணியினர் திறந்த பஸ் வண்டியில் எட்டு மணி நேரம் வீதியில் ஊர்வலம் செல்ல ஏற்பாடானது.

எனினும் வீதிகளில் கூட்டம் அளவுக்கு அதிகமாக திரண்ட நிலையில் அந்த ஊர்வலத்தை பாதியிலேயே கைவிட வேண்டியதாயிற்று.

“அதிகப்படியான கொண்டாட்டத்திற்கு மத்தியில் வீதி ஊடாக ஊர்வலம் செல்வது சாத்தியமில்லாமல் இருந்தது” என்று ஆர்ஜன்டீன ஜனாதிபதி சார்பில் பேசவல்ல கப்ரியேலா கர்ருட்டி தெரிவித்தார்.

வீரர்களை எடுத்துச் சென்ற பஸ் வண்டியின் மீது ரசிகர்கள் பாயும் வீடியோ ஒன்று சமூக ஊடகத்தில் பதிவாகி இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் பஸ் வண்டி பாலம் ஒன்றுக்கு கீழால் செல்லும்போது பாலத்தில் இருந்த ஒருவர் பஸ் மீது பாய முயன்று கீழே விழுவது தெரிகிறது.

ஆர்ஜன்டீன அணி நாடு திரும்பிய கடந்த செவ்வாய்க்கிழமை விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அணியினரை வரவேற்க புனோஸ் எயார்ஸ் வீதிகளில் சுமார் நான்கு மில்லியன் மக்கள் திரண்டதாக கணிக்கப்பட்டுள்ளது.

வீரர்களை ஏற்றிய பஸ் தலைநகரில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வந்த சதுக்கம் ஒன்றை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தபோதும் பாதுகாப்பு படையினர் பஸ் வண்டி தொடர்ந்து முன்னேறிச் செல்வதைத் தடுத்தனர்.

இந்த ஊர்வலம் பாதியிலேயே நிறுத்தப்பட்டதால் சில ரசிகர்கள் கோபம் அடைந்து கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை கட்டுப்படுத்துவதற்கு கலகமடக்கும் பொலிஸாரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆர்ஜன்டீன அணி உலகக் கிண்ணத்தை வெல்வது இது மூன்றாவது முறை என்றபோதும் அந்த அணி 36 ஆண்டுகளுக்குப் பின்னரே மீண்டும் ஒருமுறை கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அந்நாட்டில் இந்த வெற்றியை மக்கள் கொண்டாடி வருகின்றனர். உலகக் கிண்ணத்தை வென்றதை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமையும் புனோஸ் எயார்ஸில் உள்ள சதுக்கத்தில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் திரண்டனர்.

# ஐ.எல்.டி20 தொடரில் சந்திமால் ஒப்பந்தம்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறவுள்ள முதலாவது ஐ.எல்.டி20 தொடரின் டெசர்ட் வைப்பர்ஸ் அணியில் இலங்கை முன்னாள் அணித் தலைவர் தினேஷ் சந்திமால் ஒப்பந்தமாகியுள்ளார்.

சந்திமாலின் தலைமைத்துவப் பண்பு அணிக்கு உதவியாக இருக்கும் என்று டெசர்ட் வைப்பர்ஸ் முகாமையாளர் டொம் மூடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதிக சர்வதேச அனுபவம் பெற்ற சந்திமால், மொத்தம் 57 போட்டிகளுக்கு தலைமை வகித்துள்ளார். இது அணிக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று மூடி குறிப்பிட்டுள்ளார்.

“தினேஷ் இயல்பான தலைமைத்துவப் பண்பு கொண்டவர் என்பதும் இலங்கைக்கு அவர் அந்தப் பொறுப்பை வகித்திருப்பதும் உண்மையில் சாதகமான ஒன்றாக உள்ளது” என்று மூடி சுட்டிக்காட்டினார்.

சந்திமால் தவிர, இங்கிலாந்து இடது கை சுழற்பந்து வீச்சாளர் ஜக் லின்டொட் மற்றும் இங்கிலாந்து வேகப்பந்து சகலதுறை வீரர் கஸ் அட்கின்சன் ஆகியோரும் டெசர்ட் வைப்பர்ஸ் அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளனர்.

ஆறு அணிகள் பங்கேற்கும் ஐ.எல்.டி20 தொடர் வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.

# லங்கா பிரீமியர் லீக்கில் 6ஆவது அணிக்கு இடம்




லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்) தொடரில் அடுத்த ஆண்டு புதிதாக ஒரு அணி சேர்க்கப்பட்டு மொத்த அணிகளின் எண்ணிக்கை ஆறாக அதிகரிக்கப்படவுள்ளது.

2023 தொடரில் வட மாகாணம் அல்லது வட மத்திய மாகாணத்தில் இருந்து புதிய அணி ஒன்றை பார்க்க முடியும் என்று லங்கா பிரீமியர் லீக் தொடரின் பணிப்பாளர் சமன்த தொடன்வில தெரிவித்துள்ளார்.

“கடந்த மூன்று தொடர்களின் வெற்றி காரணமாக அடுத்த பருவத்தில் ஆறாவது அணி ஒன்றை சேர்ப்பதற்கு பெரும் கோரிக்கை உள்ளது. அதன்படி வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் உள்ள இளம் வீரர்களுக்கு அதிகப்படியான வாய்ப்புகள் கிடைக்கும். அதேபோன்று அடுத்த பருவத்தில் புதிய அணி ஒன்றை வாங்குவதற்கு முதலீட்டாளர்களும் ஆர்வம் காட்டி வருகின்றனர்” என சமன்த தொடன்வில குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு தொடர் டிசம்பர் மாதத்தில் நடைபெற்றாலும் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் தொடரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக எல்.பி.எல் நிர்வாகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# ட்விட்டர் பதவியை துறக்கும் முடிவை அறிவித்தார் மஸ்க்



ட்விட்டர் நிறுவனத்துக்குப் புதிய தலைமை நிர்வாகியைக் கண்டுபிடித்த பின்னர் அந்தப் பொறுப்பிலிருந்து விலகவிருப்பதாக இலோன் மஸ்க் கூறியுள்ளார். அவர் பதவி விலகுவதற்கு ஆதரவாகப் பயனீட்டாளர்கள் வாக்களித்ததை அடுத்து மஸ்க் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ட்விட்டரில் அவர் நடத்திய வாக்கெடுப்பில் 57.5 வீதத்தினர் மஸ்க் பதவி விலக வேண்டும் என்று தெரிவித்தனர்.

“பொறுப்பை ஏற்றுக்கொள்ள முட்டாள்தனமாக முன்வருபவரைக் கண்டுபிடித்த பின்னர் நான் பதவி விலகுகிறேன்” என்று மஸ்க் ட்விட்டரில் பதிவிட்டார். பொறுப்பிலிருந்து விலகிய பின் நிறுவனத்தின் மென்பொருள்பிரிவை வழிநடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தலைமை நிர்வாகி பொறுப்பிலிருந்து விலகுவது குறித்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் நம்பகத்தன்மை குறித்து அவர் முன்னதாகக் கேள்வி எழுப்பினார். வாக்கெடுப்பில் பதிவான வாக்குகள் தானியக்க மென்பொருள் செயலிகளால் மாற்றப்பட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் அவர் ட்விட்டரை வாங்கிய பின் மேற்கொண்ட அதிரடி மாற்றங்கள் கடும் விமர்சனத்திற்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# பெண்கள் பல்கலைக்கு செல்ல தலிபான் தடை



ஆப்கானிஸ்தான் பல்கலைக்கழகங்களில் உடன் அமுலுக்கு வரும் வகையில் பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டு உயர் கல்வி அமைச்சு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

அமைச்சரவை முடிவு ஒன்றின்படி ஆப்கான் அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் உடன் அமுல்படுத்தப்படும் வகையில் பெண்களுக்கான அனுமதி இடைநிறுத்தப்படுகிறது என்று அந்த அமைச்சு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தலிபான்கள் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து ஏற்கனவே இடைநிலை பாடசாலைகளில் இருந்து பெண்கள் வெளியேற்றப்பட்ட நிலையில் பெண் கல்விக்கு மேலும் கட்டுப்பாடு விதிக்கும் நடவடிக்கையாக இது உள்ளது.


இந்த அறிவிப்பு பெரும் வருத்தத்தைத் தருவதாக ஐ.நா பேச்சாளர் குறிப்பிட்டிருப்பதோடு ஐ.நா பாதுகாப்புச் சபை சந்திப்பின்போதும் இந்த முடிவுக்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தூதுவர்கள் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தடையை நியாயப்படுத்திப் பேசிய தலிபான்கள், தேசிய நலன் மற்றும் பெண்களின் கௌரவத்திற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தடையை தொடர்ந்து நேற்று பல்கலைக்கழகங்களுக்கு சென்ற மாணவிகள் நுழைவாயிலில் வைத்து தடுக்கப்பட்டுள்ளனர். தலைநகர் காபுலில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு வெளியே ஹிஜாப் அணிந்த பெண்கள் திரண்டிருப்பதை பார்க்க முடிந்ததாக அங்கிருக்கும் ஏ.எப்.பி செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். மாணவிகள் நுழைவதை தடுத்த ஆயுதமேந்திய காவலர்கள் நுழைவாயிலை மூடியுள்ளனர்.

“நாம் பல்கலைக்கழகம் சென்றபோது வாயிலில் இருந்த தலிபான்கள், அடுத்த அறிவித்தல் வரை எமக்கு அனுதி இல்லை என்று குறிப்பிட்டார்கள். அனைவரும் அழுதுவிட்டோம்” என்று காபுலில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தின் வர்த்தக மாணவி ஒருவரான ஷய்ஸ்தா குறிப்பிட்டார்.

# ஜி20 மாநாட்டில் புட்டின் பங்கேற்பு



இந்தியாவில் நடைபெறும் ஜி20 அமைப்பு நாடுகளின் தலைவர்களது உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பங்குபற்றுவார் என்று அந்நாட்டின் ஜனாதிபதி நிபுணர்கள் பணியகத்தின் பிரதித் தலைவர் ஸ்வெட்லானா லுகாஷ் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெற்ற ஜி20 அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதைத் தவிர்த்துக் கொண்டபோதிலும் இந்தியாவின் தலைமையில் நடைபெறும் மாநாட்டில் அவர் கலந்து கொள்வார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜி 20 அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியா ஏற்றுள்ளது. அதனை அடையாளப்படுத்தும் வகையிலான முதலாவது கூட்டமொன்று உதய்பூரில் நடைபெற்றது.

# 33 தாக்குதல்தாரிகளை கொன்று பாக். பொலிஸ் நிலையம் மீட்பு



பாகிஸ்தான் பொலிஸ் நிலையம் ஒன்றை கைப்பற்றிய 33 தாக்குதல்தாரிகளை கொன்று அந்த பொலிஸ் நிலையத்தை மீட்டதாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொலைதூர மேற்கு பன்னு மாவட்டத்தில் இருக்கும் பொலிஸ் நிலையம் ஒன்றையே பாகிஸ்தான் தலிபான்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றியிருந்தனர். அப்போது பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் அந்த பொலிஸ் நிலையத்தில் இருந்தனர்.

அனைத்து பணயக் கைதிகளும் விடுவிக்கப்பட்டதாகவும், இரு சிறப்புப் படையினர் கொல்லப்பட்டு, 10 தொடக்கம் 15 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் தலிபான்கள் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றிருந்தனர். அரசுடனான போர் நிறுத்தம் கடந்த மாதம் முடிவுக்கு வந்ததை அடுத்தே தலிபான்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு ஆண்டுகளாக இரு தரப்பும் மோதலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல்தாரிகள் பணயக்கைதிகளுக்கு பகரமாக தாம் பாதுகாப்பாக வெளியேற பேச்சுவார்த்தை நடத்தியபோதும் அது தோல்வியில் முடிந்தது.

# சீனாவில் மரணம் அதிகரிப்பு: மின்சுடலைகளில் நெருக்கடி



சீனாவில் நேற்று புதிய கொவிட் மரணங்கள் பற்றி அறிவிக்கப்படாதபோதும் மின்சுடலைகள் அதிகரிக்கும் சடலங்களின் எண்ணிக்கையைச் சமாளிக்கச் சிரமப்படுகின்றன.

தலைநகர் பீஜிங்கில் உள்ள மின்சுடலை ஒன்றுக்கு வெளியில் சடலங்களை ஏற்றிய பல டஜன் வாகனங்கள் வரிசையில் காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனா தனது கடுமையான கொவிட் கட்டுப்பாடுகளை தளர்த்திய நிலையிலேயே அங்கு வைரஸ் பரவல் தீவிரம் அடைந்துள்ளது. மருத்துவமனைகள் புதிய படுக்கைகள் மற்றும் அவரச சிகிச்சை பிரிவுகளை நிறுவி வருகின்றன. அடுத்த ஆண்டு சீனா ஒரு மில்லியன் கொவிட் உயிரிழப்பை எதிர்கொள்ளக் கூடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை பீஜிங்கின் டங்சூ மாவட்ட மின் சுடலைக்கு வெளியில் சடலங்களை ஏற்றிய சுமார் 40 வாகனங்கள் காத்திருப்பதாகவும் வாகனத் தரிப்பிடமும் முழுமையாக நிரம்பி இருப்பதாகவும் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சோங்சிங் நகரில் உள்ள மின்சுடலை, சடலங்களை வைத்திருக்க இடம் இல்லை என்று தெரிவித்துள்ளது.

அண்மைய நாட்களில் அங்கு கொண்டுவரப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை முன்பைவிடப் பல மடங்கு அதிகம் என்றும் அவற்றை வைப்பதற்குப் போதுமான குளிர்சாதன வசதி இல்லை என்றும் ஊழியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 22ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.